# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 ஆனி 14ஞாயிற்றுக்கிழமை (28-06-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்:181


# ரணிலின் நிபந்தனையை ஏற்பதில்லை என முடிவு!

## ஜனாதிபதி தேர்தல் முன்'கூட்டியே நடக்காது

கொழும்பு, ஜூன் 28

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு அரசாங்கம் இணங்கினால் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஆதரவு வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. க தலைவருமான ரணில் விக்கிரமசிங்க விதித்த நிபந்தனையை ஏற்பதில்லை என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் நேற்று முன்தினம் விசேடமாகக்கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்த வேண்டுமென்ற ஐ.தே.கட்சியினரின் கோரிக்கை அடிப்படைக் காரணம் அற்றது எனவும் —

திட்டமிட்டபடி ஒகஸ்ட்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதெனவும் —

அதற்கான சகல ஏற்பாடுகளையும் துரிதமாகச் செய்வதெனவும் — அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. (இ-7-9)

# சுயேச்சைக் குழு வேட்புமனு தாக்கல்

கொழும்பு, ஜூன் 28

மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மாத்தளை மாவட்டத்தில் சுயேச்சைக் குழு ஒன்று நேற்று கட்டுப்பணம் செலுத்தியதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்,

மத்திய மாகாண சபை, ஊவா மாகாண சபை ஆகியவற்றுக்கான தேர்தலுக்கு நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

வடமத்திய மாகாண சபைக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் அடுத்த மாதம் 4ஆம் திகதியிலிருந்து 11ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ப்படும்.

மேல் மாகாணசபை, சப்ரகமுவ மாகாண சபை ஆகியவற்றுக்கான தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் அடுத்த மாதம் 8 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. (இ-9-21)

# மாகாணசபைத் தேர்தல் பாதுகாப்பு குறித்து அமைச்சரவை ஆராய்வு

## போதிய பொலிஸாரை பெறமுடியாத நிலை

கொழும்பு, ஜூன் 28

நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் மாகாணசபைத் தேர்தலின்போது ஏற்படக் கூடிய பாதுகாப்புப் பிரச்சினை குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தையும் நடத்திக் கொண்டு மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்துவது சிரமமாக இருக்கும் என்பதாலேயே மாகாண சபைத்தேர்தல்களை ஒத்தி வைக்க ஐ. தே. க. வின் உதவியை அரசு நாடி இருந்தது.

வடக்கு — கிழக்கு யுத்தம் நடைபெறும் சந்தர்ப்பத்

(10 ஆம் பக்கம் பார்க்க)



ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே எண்டு சும்மாவா சொல்லி இருக்கினம்.........!

## தாக்குதல்களைக் கண்டித்து நேற்று மல்லாவியில் மௌன ஊர்வலம்

வவுனியா ஜூன் 28

கிளிநொச்சி சுதந்திரபுரம் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி 25 பொதுமக்கள் பலியான சம்பவங்களைக் கண்டித்தும்–

தொடர்ச்சியாக வன்னிப் பகுதியில் இடம்பெற்றுவரும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்தும்–

மல்லாவி பிரஜைகள் குழுவினால் நேற்று மௌன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

மல்லாவி வண்ணன் விளையாட்டு மைதானத்தில் இருந்து நேற்றுக்காலை 10-30 மணிக்கு ஆரம்பமான இந்தஊர்வலம்பிரதான வீதி வழியாக சர்வதேசசெஞ்சிலுவைக்குழுவின் அலுவலகத்தைச்சென்றடைந்தது. அங்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# காற்றுடனான மழையால் தெற்கில் மூவர் மரணம்

## 300 வீடுகள் வரை சேதம்

கொழும்பு, ஜூன் 28

நாட்டின் தென்மேல் மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாகப் பெய்து வரும் காற்றுடன் கூடிய மழையினால் 3 பேர் உயிரிழந்தனர். 300க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வீச ஆரம்பித்திருப்பதனாலேயே இவ்வாறு கடுமையான காற்றுடன் சேர்ந்து மழை பெய்வதாகவும், இத்தகைய நிலைமை இன்னும் ஒரிரு நாள்களுக்கு நீடிக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

கம்பஹா, களுத்துறை மாவட்டங்களிலேயே அதிக அளவான வீடுகள் சேதமடைந்தத்தாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# புலிகளின் கப்பலில் டாங்கி எதிர்ப்பு ஆயுதம்?

புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று சர்வதேச ஆயுத வியாபாரிகளிடமிருந்து வாங்கிய டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை ஏற்றியவாறு எந்த வேளையிலும் இந்து சமுத்திரம் ஊடாக இலங்கை வந்தடைய வாய்ப்புக்கள் உள்ளன என இந்தியப் புலனாய்வுப் பிரிவு, இந்திய கடற்படைக்கு அறிவித்துள்ளது என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இந்த ஆயுதங்கள் பிரிட்டனில் பதிவு செய்யப்பட்ட கப்பல் ஒன்றின் மூலம் உக்ரைனில் இருந்து கொண்டு வரப்படுவதாகவும்—

இடை வழியில் ஆயுதங்களை வேறு கப்பலுக்கு மாற்றுவதற்கு அல்லது ஏற்றிவரும் கப்பலின் கொடியை மாற்றுவதற்கு திட்ட மிடப்பட்டிருப்பதாகவும் இந்தியபுலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது என்று மேலும் கூறப்படுகின்றது. (இ-9-10)

# ஜெயலலிதா, மமதாபனர்ஜி, ஹெக்டே நேற்றைய கூட்டத்துக்கு வரவில்லை

## மாற்று அரசு அமைக்க சோனியா தயார்

புதுடில்லி, ஜூன் 28

பாரதீய ஜனதா அரசின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று புதுடில்லியில் நடைபெற்றபோது அ. தி. மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா திருணாமூல் காங்கிரஸ் தலைவர் மமதாபனர்ஜி, லோக்சக்தித் தலைவர் இராமகிருஷ்ண ஹெக்டே ஆகியோர் அதில் கலந்து கொள்ளவில்லை.

தனக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக இக் கூட்டத்தில் தன்னால் கலந்து கொள்ள முடியவில்லை என அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவும்—

மேற்கு வங்காளத்தில் நடைபெறும் சட்டப் பேரவை தேர்தல் வாக்கு எண்ணும் வேலையினால்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தோட்ட இளைஞர் படை தொண்டா யோசனை

தோட்ட இளைஞர்களை உள்ளடக்கிய படை ஒன்றை அமைப்பது குறித்து இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் அரசின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அண்மையில் அமைச்சரவையிலும் அவர் பிரஸ்தாபித்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தோட்டப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் இருப்பதாக குற்றம் சுமத்தப்படுகின்றது.

இத்தகைய ஊடுருவல்களை தடுப்பதற்காக தோட்ட இளைஞர்கள் கொண்ட படை அணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று தொண்டமான் தெரிவித்துள்ளார். (இ-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

உ

தொல்புரம் — வழக்கம்பரை
முத்துமாரியம்மன் தேவஸ்தான
பரிபாலன சபை

தொல்புரம், சுழிபுரம்.

## வருடாந்த மகோற்சவம்

மேற்படி மகோற்சவம் 29 - 06 -1998 திங்கட் கிழமை மு. ப. 11-00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தேர்த்திருவிழா 08 - 07 - 1998 புதன்கிழமை.
(அம்பாள் இரதத்தில் ஏறல் பி.ப. 1.30 மணி)

தினமும் வசந்த மண்டபபூசை-காலையில் 11-00மணி
மாலையில் 5-00மணி

தினமும் மாலை 4-00 — 5-00 மணிவரை
சமயச் சொற்பொழிவு நடைபெறும்.

நிகழ்த்துபவர்:- திருமிகு. ஆறு. திருமுருகன்
B- A. அவர்கள்

விடயம்:- "பெரியபுராணம்"

அனைவரும் வருக. அம்பாள் அருள் பெறுக.

(57192) பரிபாலன சபையினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் உபதலைவர்
திரு. கு. கணேசலிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி குருசாமி நாகம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை. (57198)

## கண்ணீர் அஞ்சலி


பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின்
யாழ். கிளைப் பொதுச் செயலாளர்

### எஸ். ஏ. ஒஸ்வல்ட்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

வித்தியாலய அதிபர் சங்கமும்
(57203) தொண்டர் ஆசிரியர்களும்

## தசாக கிருகயக்கு அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 19 — 04 — 1958

மறைவு 20 — 06 — 1998

### அமரர் சிவானந்த இராமகிருஷ்ணக்குருக்கள்
(சந்திரக்குருக்கள்)

எமது குடும்பத் தலைவரின் மறைவின் போது இறுதிச் சடங்கில் கலந்து ஆறுதலளித்தோருக்கும், மரணக்கிரியையை நடத்திய மாதகல் கதிர்செல்லப்பா குருக்கள் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை 29—06—98 திங்கட் கிழமை காலை 10 மணிக்கு நிகழும் தசாகக் கிரியையிலும், 2—7—98 ஆம் திகதி வியாழக்கிழமை காலை இடம் பெறவுள்ள கிருகயக்ஞும், விப்கிர போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி: இ. ஜெயகௌரி
பிள்ளைகள்: கானப்பிரியா
கணநாதசர்மா
மாமன்: அ. அண்ணாசாமிஐயா

"பிரேமச் சந்திர வாசா"
துன்னாலை கரவெட்டி. (57184)

## இசை அரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 28

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மாதாந்த இசையரங்கில் நாதஸ்வர வித்துவான்கள் க.இ. சுந்தரமூர்த்தி, சு. தேவதாஸ், தவில் வித்துவான்கள் ச. சொர்ணலிங்கம், சு. ராமதாஸ் ஆகியோரின் நாதஸ்வர இசைக்கச்சேரி இன்று மாலை 3.30 மணிக்கு ஆதீனகலாமண்டபத்தில் நல்லூர் தெற்கு விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் திருமதி அனந்தநாயகி சண்முகானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-8)

## தமிழ் விழா

அரியாலை, ஜூன்28

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ் விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை நடை பெறவுள்ளன.

நாவலர் கலாசார மண்டபத்தில் காலை நிகழ்வுகள் ஆரம்பமாகும். 'ஈழத்து இலக்கியங்களில் ஒரு மீள் பார்வை' என்ற கருத்தரங்கு கலாநிதி க. குணராஜா தலைமையில் இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் மன்ற கலையரங்கில் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும்.

தலைமையுரை, வரவேற்புரை, சிறப்புரை இசைக்கச்சேரி 'சகுந்தலை' என்ற இசைநாடகம் என்பன இடம்பெறும். (ஐ-17)

## வாடகைக்கு தெளி கருவி

தென்மராட்சி, ஜூன் 28

பளைப் பிரதேசத்தில் தென்னை மரம், மாமரம் ஆகியவற்றுக்கு கிருமிநாசனிகள் விசிறுவதற்குரிய தெளிகருவிகள் வாடகைக்கு விடுவதற்கென பளை கமநல சேவைகள் நிலையத்திற்கு வந்துள்ளன.

இத் தெளிகருவிகள் வாடகைக்குத் தேவைப்படுவோர் கமநல சேவைகள் நிலையத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஐ-117)


லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
கமலஹாசன் - ஸ்ரீதேவி
ஸ்ரீபிரியா, மனோரமா
நடித்த
வாழ்வே மாயம்
மனதை உருக்கும்
குடும்பச் சித்திரம்.
ரமேஸ் அரவிந்,
சரத்குமார், ஹீரா
நடித்த
வசந்தகாலப்பறவை
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(57176)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
3 ஆவது வெற்றிவாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
பாட்ஷா
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3917)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
28-06-98 ஞாயிறு
கமல்-மீனா, நாசர்
ஜெமினி நடித்த
காட்சிகள்:- 10-30, 2-30
(57196)


## மரண அறிவித்தல்கள்

திருமதி

### நல்லதம்பி நல்லம்மா

ஈவினையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி பரமேஸ்வராசந்தியை வசிப்பிடமாகவும், தெகிவளை கொழும்பைதற்போதையஇருப்பிடமாகவும்கொண்ட திருமதி நல்லதம்பி நல்லம்மா 26 - 06 - 98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சண்முகநாதன், காலஞ் சென்ற இரட்ணசிங்கம், மகாலிங்கம் (மகான்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற வனஜாமலரின் அன்பு மாமியாரும், திருமதி பிரமிளா கணேஷ்வரன் (கனடா), ஷகிலா, நிஷலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கௌநந்தின் (கனடா) அன்புமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28 - 06 - 98 ஞாயிறு 12/1, மெல்போட், கிரைசண்ட், தெகிவளையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
ஷகிலா சண்முகநாதன்,
(57190) (தெகிவளை)

### ஒஸ்வல்ட் செபஸ்ரியாம்பிள்ளை

ஒஸ்வல்ட் செபஸ்ரியாம் பிள்ளை 24 - 06 - 98 புதன்கிழமையன்று அகால மரணமானார்.

இவர் காலஞ் சென்ற வால்ட்டர் செபஸ்ரியாம் பிள்ளை அன்ரோனிபா பெல்கொன்ஸ்ரன் ஆகியோரின் மகனும், ரஞ்சினி ஜோச்கிம் ஒஸ்வல்ட் (கல்விப் பணிப்பாளர், வவுனியா) இன் அன்புக் கணவனும், றுக்சன் ஒஸ்வல்ட் (மட்டக்களப்பு பல்கலைக் கழக மாணவன்) இன் அன்புத் தந்தையும், அருட் திரு பெனற் கொன்ஸ்ரன்ரைன் அடிகளாரின் அன்பு மருமகனும் ஆவார்.

இவரின் இறுதிச்சடங்கு 28-6-98 இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு (புதிய நேரம்) பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அன்புத்தாய்

இல. 8 சதிற்றல் வீதி,
கருநகர் (57193)

### திருமதி குருசாமி நாகம்மா

ஊர்காவற்றுறை புளியங்கூடலைச் சேர்ந்த திருமதி குருசாமி நாகம்மா 26-06-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா குருசாமி (சமாதான நீதிவான், முன்னாள் உறுப்பினர், நாரந்தனை கிராமசபை) அவர்களின் அன்பு மனைவியும், கணேசலிங்கம் (செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேசசபை), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), திருமதி குணசிங்கம் கலைமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலா, லீலாவதி, காலஞ்சென்ற பேரம்பலம், குணசிங்கம் (வேலணை, தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் மாநகரசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (28-06-98) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் சுருவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்,

தகவல்:
கு. கணேசலிங்கம்
புளியங்கூடல், (மகன்)
ஊர்காவற்றுறை. (57204)

### சின்னையா மாசிலாமணி
(பவுணர்)

காங்கேசன்துறை

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், சந்தை வீதி, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மாசிலாமணி அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னமணியின் அன்புக் கணவரும், மனோகரன் (ஜேர்மனி), சித்திரா, இந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயதாஸ் (ஜெயசங்கர் தச்சுத் தொழிற்சாலை, கந்தர்மடம்), பவானி (ஜேர்மனி), ராதாகிருஷ்ணன் (லண்டன்) ஆகியோரின்மாமனாரும், பிரகாஷ், துர்க்கா, மதுரா, கௌதமன், இந்துஜா, விதுர்ஷன், பிரியங்கா, கௌசிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-6-98) ஞாயிறு காலை 10 மணியளவில் 72/1, பலாலி வீதி, கந்தர் மடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

தகவல்;
ந. ஜெயதாஸ்
72/1, பலாலி வீதி, (மருமகன்)
கந்தர்மடம். (57202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்ந்து அகன்ற புலமையைப் பொழிந்த நடமாடும் பல்கலைக்கழகமாக மிளிர்ந்தவர்

திருநெல்வேலி பழங் கிணற்றடி வீரகத்திப் பிள் ளையார் கோயிலில் இடம் பெற்ற புதிய சித்திரத்தேர் விழாவுக்கு யாழ். பல்கலைக் கழக பதிவாளர் வே. ந. சிவ ராசா, சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப் பாக்குட்டி ஆகியோர்கள் உரையாற்ற வந்திருந்தனர்.

பல்கலைக்கழகப் பதிவா ளர் வே. ந. சிவராசா அவர் கள் முதலில் பழங்கிணற்ற டிப் பிள்ளையாரின் திருவருட் சிறப்பை எடுத்துரைத்தார் தொடர்ந்து பேசுகையில் பிள்ளையாரின் திருவருளி னால் திருநெல்வேலியில் இரண்டு பல்கலைக்கழகங் கள் அமைந்திருப்பதே மிக விசேடம் என்றார்.

திருநெல்வேலியில் பல் கலைக்கழகம் ஒன்று தானே யுண்டு. அவ்வாறிருக்கப் பதி வாளர் அவர்கள் திருநெல் வேலியில் இரண்டு பல்கலைக் கழகங்கள் என்கின்றாரே என்று நம்முள் ஐயுற்ற வேளையில் மேலும் விரித்துச் சொல்லத் தொடங்கினார் கள்.

திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய் என் பதே சேர். பொன். இராம நாத வள்ளலின் தாரக மந் திரம். அந்தக் குறிக்கோளு டன் நிறுவப்பட்டதே பர மேசுவரக்கல்லூரி. பரமேசு வரக்கல்லூரி இன்று பல் கலைக்கழகமாக நிமிர்ந்து நிற்கிறது—

நிமிர்ந்த போக்கும் நேர் கொண்ட பார்வையும் உடையவரான பண்டிதமணி அவர்கள் திருநெல்வேலியில் ஒரு நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்குகின் றார்—

இந்த இரண்டு பல்கலைக் கழகங்களும் திருநெல்வேலி யில் அமைந்து விளங்குவதற்

## பண்டிதமணி தமது பணிகளால் முதுபெரும் சான்றோன் ஆகினார்

குப் பழங்கிணற்றடி வீரகத் திப் பிள்ளையாரின் திரு வருளே காரணம் — என் றார்.

திருநெல்வேலி பழங்கிணற் றடிப் பிள்ளையார் கோயி லுக்கு அயலில் அமைந்துள்ள பண்டிதமணி அவர்களது இல்லத்துக்குச் சென்ற நாட் ''யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர்வே. ந. சிவராசா அவர்கள் உங்களை நடமாடும் பல்கலைக்கழகம்' என்று பேசியுள்ளார் என் றோம்.


வே. ந. சிவராசாவும் அவ ரது தந்தையாரான ஆசிரி யர் நடராசாவும் எம்மிடத்து மிகவும் மரியாதை செலுத்து பவர்கள், அன்புள்ளவர்கள்.

அந்த அன்பு மேலீட்டினால் என்னை நடமாடும் பல்க லைக்கழகம் என்று பேசியிரு க்கலாம். பல்கலைக்கழகம் எங்கே நான் எங்கே — என் றார் பண்டிதமணி அவர்கள்.

இலக்கிய கலா நிதி என்ற கௌரவப்பட்டத்தினை இலங்கைப் பல்கலைக்கழகத் திடமிருந்து முதன் முதலா கப் பெற்ற தனிப்பெருமை பண்டிதர் ஐயா அவர்களுக் கேயுண்டு.

### முதுபெரும் சான்றோர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவியை முதன்முதலில் தம தாக்கிக் கொண்ட பெருமை பேராசிரியர் கலாநிதி சுப்பிர



மணியம் வித்தியானந்தன் அவர்களுக்கேயுண்டு. அப் பொழுது துணைவேந்தர் வித்தியானந்தன் அவர் களைப் பலரும் பலவாறா கப் பாராட்டினார்கள்.

பண்டிதர் ஐயா அவர்கள் தமது பாராட்டுரையில், ''யாழ். பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் திரு. சுப்பிரமணியம் வித்தியானந் தன் அவர்கள் பழைமையும் புதுமையும் இணைந்தவொரு நவீன சேதுபந்தனம். கல்விப் பரப்பைப் பாரதம் பார்க் கும் கண்வேறு இக்காலத்து இரவற் கண்வேறு. உபவேந் தர் அவர்களின் கண் மரபு வழிவந்த சொந்தக்கண்' பாரதக்கண். கண்ணான கண்படைத்த ஒருவரை உப வேந்தராகப் பெறுவதற்கு எத்துணைத் தவம் வேண் டும். அவர்கள் அமைதியான முறையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை நடத்தி வருவது தமிழ்மக்கள் பெரு மைப்படத்தக்க தொன்று'' என்று குறிப்பிடப்பட்டுள் ளார்.

பண்டிதர் ஐயா அவர்க ளின் ஆழ்ந்த அகன்ற கல் விப் பெருமையைக் கண்டு எப்பொழுதும் உள்ளம் பூரிப்பு அடைபவர் பேராசிரி யர் சு. வித்தியானந்தன் அவர்கள். பேராசிரியர் அவர் கள் பண்டிதர் ஐயா அவர் களின் சிறப்புக்களை இரத் தினச் சுருக்கமாகப் பின்வரு மாறு எடுத்தியம்புகின்றார்:

''தமிழ், சமயம், தத்து வம் என்பவற்றை ஆராய் வதையும் அவ்வாறு ஆராய்ந்து கண்டவற்றை மாணாக்கருக்குப் போதிப்ப தையும், பொதுமக்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்து வதையும் நோக்கமாகக் கொண்டு அதற்கு வாய்ப் பாகப் பிரமச்சாரிய விரதம் பூண்டு அரை நூற்றாண்டுக்கு மேலாக அவர் ஆற்றி வந்த பணிகள் அவரை நமது தலை முறையின் முதுபெரும் சான் றோர் என்ற நிலைக்கு இட்டு வந்தன. மூதறிஞர் என்ற தகுதிப்பாட்டையும் அவருக்கு எய்த வைத்தலும், அன்னார் ஆற்றி வந்துள்ள பணிகளின் இயல்பை விளங் கிக் கொள்வதும், அவற்றின் பெறுபேறுகளை மதிப்பிடுவ தும் அவற்றுக்குக் களமாக அமைந்த சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்திக் கொள்வ தும், அவற்றின் வரலாற்றுத் தொடர்ச்சியை இனங்கண்டு கொள்வதும் இன்றைய ஆய் வுத் தேவைகள் ஆகிவிட் டன'' என்றார்.

### நிஷ்காமிய கர்மயோகி

துணைவேந்தர் பேராசிரி யர் கலாநிதி சு. வித்தியா னந்தன் அவர்களின் உரையை அனுவதிப்பது

**ஆசிரியமணி**
**அ. பஞ்சாட்சரம்**

போல அமைந்துள்ளது பௌதிகப் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர் களின் கூற்று:

''சோக்கிரதீஸ் ஒரு நிஷ்கா மிய கர்மயோகி ஆவார். அவ ரது முதுமொழிகளில் எமது உபநிடதங்கள், கீதை, குறள் முதலியவற்றின் சாரம் படிந் திருப்பதை நாம் காண்கி றோம். பண்டிதமணியும் ஒரு நிஷ்காமிய கர்மயோகி ஆவார். நூல்களிலுள்ள அவ ரின் முதுமொழிகளும் அவர் கையாண்ட மேற்கோள்களும் தெளிவாகக் காட்டப்படு கின்றன. மேலைநாட்டு மேதைகளாலும் பாரத நாட்டு இருடியர்களாலும் கண்டுபிடிக்கப்பட்ட பேருண் மைகளும், தத்துவங்களும் பண்டிதமணி அவர்களது சொந்தக் கருத்துக்களுடன் முரணின்றி ஒத்திருப்பதை நாம் காண்கின்றோம். இந்த இருபதாம் நூற்றாண்டில் எங்கள் இனத்தில் எங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## எதிரொலி:

- கசிப்புத் தயாரிப்பவர்களைப் பிடிக்கப் போன வர்கள், அவர்கள் கொடுத்த சாராயத்தைக் குடித்துவிட்டு, எவ்வித நடவடிக்கையும் எடுக்கா மல் திரும்பி விட்டனர்.
  - ★ கசிப்புக்காரர் கொடுத்த சாராயம் அவர்க ளைக் 'கப்சிப்' ஆக்கிவிட்டது!
- போரிலே இறந்ததாகக் கருதப்பட்ட ஒருவரின் மரணச் சடங்கு நடந்து கொண்டிருந்தபோது அங்கு சென்ற படையினர், அவர் இறக்கவில்லை எனச் சொல்லி, 'சீல்' வைக்கப்பட்ட பிரேதப் பெட்டியைத் தம்முடன் எடுத்துச் சென்றனர்.
  - ★ அந்தப் பிரேதத்துக்கு இன்னும் எத்தனை இடங்களில் மரணச் சடங்குகள் ஏற்பாடு செய் யப் படுமோ யாரறிவார்?
- இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கான கடன் களை இடை நிறுத்த ஜீ-8 கூட்டமைப்பு நாடு கள் முடிவு செய்துள்ளன.
  - ★ கடன் பட்டார் நெஞ்சமல்ல, கடன் கொடுப் பார் நெஞ்சந்தான் கலங்குகின்றது!
- லஞ்ச ஊழல ஆணைக்குழு உறுப்பினர்கள் பதவி விலகுவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.
  - ★ கஞ்சத்தனமாக இராமல் நல்ல லஞ்சத்தன மாக இருந்தால், பிரச்சினையைத் தீர்க்கலாம் என ஆலோசனை கூறுகிறார் ஒரு லஞ்ச நிபுணர்!
- கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளை விட்டுக் கொடுத்து விட்டு, வடக்குக் கிழக்கு இணைப் புக்குப் பாடுபட வேண்டும் என்ற நிலைப் பாட்டைச் சில தமிழ்த் தலைமைகள் எடுத்துள் ளன.
  - ★ கற்பை விலைபேசிக் கண்ணகிக்குக் கோயில் கட்டும் முயற்சி!
- தமிழகத்திலுள்ள மூன்று கட்சிகள், இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாகப் பாரதப் பிரதமருக்குக் கொடுத்த மகஜரை வரவேற்று இலங்கைத்தமிழ்க் கட்சிகள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.
  - ★ முன்னர் நாகேந்திரநாத் ஜா அறிக்கை வெளி யிட்டபோது காணாமற் போன முதுகெலும்பு இப்போது திடீரென்று தோன்றியதைக் கண்டு மூக்கின் மேல் விரல் வைக்கின்றார்கள் தமிழ் மக்கள்!
- ஜனவரி மாதம் முதல் மதுபான, சிகரெட் விளம் பரங்களுக்குத் தடை விதிக்கப்படும்.
  - ★ விளம்பரப் பணம் மிசசமாவதை எண்ணிச் சம் பந்தப்பட்ட கம்பனிகள் மகிழ்ச்சியடையும். ஏனெனில் இலங்கைக் 'குடி'மக்கள் விளம்பர மில்லாமலே காசைக்கரியாக்குவார்கள் என்பது அவற்றிற்கு நன்கு தெரியும்!
- வெற்றி உறுதி யுத்த நிலைமை குறித்து மூன்று நாள்களுக்கு ஒரு தடவை அறிக்கை வெளியிடப் படும்.
  - ★ பாதுகாப்பு சம்பந்தமான செய்திகளைப் பாது காப்பாகத் தயாரிப்பதற்கு மூன்று நாள் அவ காசந் தேவைதானே!

— இடியன்

# அன்புள்ள மகளுக்கு...

எனது அன்பு மகளே,

நீ போன கிழமை வீட்டிற்கு வருவா யெண்டு நான் காவலிருந்தேன். ஏமாறினது தான் மிச்சம். இஞ்சை உன்ரை தம்பியும், அக்கா ஏன் வரவில்லையெண்டு கேட்கிறான். உடம்புக்கு ஏதும் சுகமில்லையே? அப்பிடி ஏதாவது சுகமில்லையென்றால்கடிதம்போடு. நான் தம்பியோடை அங்கை வாறன்.

கடந்த சில வருசமாக நீ உன்ரை பட்டப்படிப்புக்காக உன்ரை சிநேகிதிய ளோடை அறை ஒண்டிலே தங்கிப்படிச்சாய். பட்டப்படிப்பு முடிஞ்சு இப்ப ஆங்கிலம் படிக்க வேண்டுமெண்டு இன்னும் அறை யொண்டிலை தங்கிப் படிப்பது அவசியமோ எண்டது தான் என்ரை கேள்வி, பட்டப் படிப்பு படிச்ச நேரம் ஆங்கிலமும் படிச்சனி தானே. அதின்ரைஅவசியம் இப்பதான்உனக்கு தெரியுது போலை,

பிள்ளை நீ எனக்குஒரேயொரு மகள். உன்ரை கொண்ணன் மார் வெளிநாட்டிலி ருக்கினம், அவையள் தங்கச்சியைப்படிப்பித்து நல்லதொருகலியாணம் செய்து வைக்கவேணு மெண்டு ஆசைப்படுகிறாங்கள். நான் நீவீட் டுக்கு வாறநேரம் உனக்கு ஏதாவது புத்தி சொல்லவெண்டால் உன்ரைஅப்பாஎன்னிலை கோவிக்கிறார். அதுதான்இந்தக்கடிதம் எழு துகிறன் நீ ஒருக்கால் இதை வடிவாய் வாசி.

நீ வளர்ந்து கலியாண வயசிலை நிக்கிற பிள்ளை. நான் உன்னை பத்து மாசம் சுமந்து பெற்ற தாய், எனக்குத்தான் பொம்பிளைப் பிள்ளையின்ரை அருமை விளங்கும்.

எங்கடை காலத்தைப்பற்றி நான் பேச வரயில்லை. இருந்தாலும் நாங்கள் தமிழர். எங்களுக்கெண்டு ஒரு கலாசாரம் இருக்கு. அதை மறக்க முடியுமே? நான் போறவாற இடங்களிலை உன்னைப் போல பிள்ளை யள் செய்கிற புரளியளைப் பார்க்க என்ரை மனம் கலங்குது.

எங்கடை காலத்திலை அப்பு தோட்டத் தாலை, வயலாலை கொண்டு வாறதிலை திண்டமிச்சத்திலை தானே நாங்கள் உடுத் துப் படுத்தது. இப்ப ஆரைப்பாத்தாலும் வெளிநாட்டு வருவாய் உள்ளவை. அதுக் காக எங்கடை கலாசாரத்தை வித்துப் போட வேணுமே?

நான் படிக்கிற காலத்திலை, சின்னப் பிள்ளையாக இருக்கேக்கை அம்மா சட்டை போட்டுவிட்டா. வளர்ந்து வர பாவாடை சட்டை, தாவணி, புடைவை எண்டு 16 வய

> இன்றைய பெண் பிள்ளைகள் தமிழர் கலாசாரத்தை மறந்து வருவதைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் நெஞ்சு குமுறும் தாய்மார்களில் ஒருவரான 'யோகம்' எழுதிய மடல் இது.
>
> 'யோகம்' என்ற புனை பெயரில் மறைந் திருப்பவர் பெரிய கல்வி நிறுவனம் ஒன் றின் அதிபராகப் பணிபுரிந்தவர்; பட்ட தாரியுமாவார்.

திலை சீலை கட்டத் துவங்கினனான். நான் 8 ஆம் வகுப்பு வரைக்கும் படிச்சாலும் இரா மநாதன் கல்லூரியிலை தான் படிச்சனான். சேர். பொன் இராமநாதன்ரை பெஞ்சாதி வெளிநாட்டுக் காரியாக இருந்தும் எங்கடை கலாசாரத்தை எப்படி வளர்த்தவ. இப்ப அந்தக்கல்லூரியும் வெளிநாட்டு மோகத் திலைதான் நிற்குது. மோனை உனக்கு இப்ப 22 வயது. நீ கொஞ்சம் எங்கடை கலா சாரத்தை கடைப்பிடிச்சால் நல்லது என் னோடை கோபிக்காதை. நான் உன்னைப் பெத்துப் போட்டன். கட்டுப்பாடாக வளர்க்க வேண்டியது என்ரை கடமை.

### கண்டபடி திரியாதை

உனக்குக் அப்பா சைக்கிள் வாங்கித் தந்திருக்கிறார். நீ அதிலை கண்டபடி திரி யாதை. வகுப்புக்கு மாத்திரம் போய்வா. றோட்டிலை இந்தப் பொம்பிளைப்பிள்ளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வின் ஆதாரத்தையே

# அச்சுறுத்தும் சுற்றாடல் விவகாரம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சூழல் பாதுகாப்பிற்கும் வறுமைக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு. மழையின்மை, வரட்சி, யுத்தம் பாலைவனமாதல் போன்ற காரணங்களால் மக்கள் வறுமையில் அகப்பட்டு பட்டினி சாவுகள் பல நாடுகளில் ஏற்பட்டுள்ளன கைத்தொழில் நாடுகள் 22 சதவீதமான சனத்தொகையைக் கொண்டபோதிலும் 70சதவீதமான வளங்களை நுகருகின்றன அதே வேளை வறிய நாடுகளும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் வளங்களின் பற்றாக் குறைவினால் வறுமையில் வாடுகின்றன.

**மனிதனும் இயற்கையும்**

மனிதன் தனது ஆசை காரணமாகவும், சுயநல நோக்கு காரணமாகவும் இயற்கையைச் சுரண்டுகின்றான். இயற்கையை சுரண்டிய மனிதன் பின் ஒருவரை ஒருவர் சுரண்டுகின்றான். அதன் பின் இனம் இனத்தை சுரண்டுகின்றது. அதன் பின் நாட்டை நாடு சுரண்டுகின்றது இதன் விளைவாக யுத்தங்கள் தோன்றியுள்ளன. நவீனஆயுதங்கள் உருவாகின. இறுதியில் உலக நாடுகள் யுத்தத்தில் ஒன்றுடன் ஒன்று சார்ந்தோ அல்லது எதிராகவோ செயற்பட்டு ஆயுத உதவிகள், நிதியுதவிகள் வழங்கி யுத்தத்தை ஊக்குவிக்கின்றன ஆயுத உதவி வழங்கும் அளவிற்கு ஒரு நாடும் சூழல் பாதுகாப்பிறகு உதவ முன்வருவதில்லை.

சுற்றாடலுக்கும் வறுமைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் குறிக்கும் முக்மாக 1993ஆம் ஆண்டு உலக சுற்றாடல்தினத்தின்தொனிப் பொருளாக ''வறுமையும் சுற்றாடலும்'' என்னும் பதம் வழங்கப்பட்டது.

### சுற்றாடல் அகதிகள்

வறிய நாடுகளில் வரட்சி வெள்ளப்பெருக்கு, பாலைவனமாதல் போன்றவற்றால் வறுமையும், பட்டினியும் ஏற்பட்டு சூழல் மாசடைவது போன்று கைத்தொழில் நாடுகளில் ஓசோன்படல பாதிப்பு அமில மழை, பூகோள வெப்ப உயர்ச்சி நச்சுபபொருள்களை குவித்தல். கடல்மட்டம் உயர்தல் கைத்தொழில் விபத்துக்கள் போன்ற சுறறாடல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சுற்றாடல் பிரச்சினைகளால் மக்கள் இடம் பெயர வேண்டியுள்ளது. இதனால் யுத்த அகதிகள்பொருளாதாரஅகதிகள் போன்று புதிதாக சுற்றாடல் அகதிகள் என்ற புதிய சமூகப் பிரச்சனை தோன்றியுள்ளது.

கைத்தொழில் நாடுகள் தங்களிடம் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இருக்கின்றன என்ற கனவுலக வாழ்க்கையில் சூழலைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் தவறிவிட்டு இன்று திண்டாடுகிறார்கள். இந்நிலை எங்களுக்கோ எமது சந்ததியினருக்கோ வேண்டாம். உலகத்திலுள்ள பல நாடுகளில் ஏற்பட்ட சூழல் மாசுறுதல் பிரச்சினைகளைப் பாடமாகக் கொண்டு எமது அபிவிருத்தித்திட்டங்களை சுற்றாடலுடன் இணைத்து திட்டமிடப்பட வேண்டும்.

### விழிப்புணர்ச்சி

கடந்த கால் நூற்றாண்டு காலமாக உலக நாடுகள் சூழல் மாசுறுவதிலிருந்து பாதுகாப்பதற்கான விழிப்புணர்ச்சியை சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இதன்படி காலத்திற்கு க்காலம் சர்வதேச சுற்றாடல் மகாநாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

1972 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சுவீடன் நாட்டு ஸ்ரொக்காம் நகரில் ஸ்ரொக்காம் பிரகடனம் ஆக்கப்பட்டது. 1983இல் ஐக்கிய நாடுகள் சபையில் சுற்றாடல் பாதுகாப்புத்திட்டம் ஸ்தாபிக்க முடிவெடுக்கப்பட்டு டோக்கியோவில் 21 நாடுகள் சேர்ந்து புறன்லன்ட் ஆணைக்குழு ஐக்கிய நாடுகள் சபையால் அமைக்கப்பட்டது. 1992இல் பிரேசில் நாட்டு றியோ நகரில் நடைபெற்ற சூழல் பாதுகாப்பு மாநாடு பூமி உச்சி மகாநாடு என அழைக்கப்பட்டது. எகிப்து நாட்டு கெய்ரோ நகரில் 1994 செப்ரெம்பரில் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான மகாநாடு நடைபெற்றது.

சர்வதேச மட்டத்தைப் பொறுத்தளவில் பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வுகள் ஆராயப்படுகின்றன. அவற்றில் சிலவே நடைமுறைப் படுத்தப்படுகின்றன. எங்கள் நாட்டில் ஏனோ தானோ வேகத்தில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், மறு புறத்தில் சுற்றாடல்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

**மு. கந்தசாமி**
விரிவுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

# ஈழத்து கவிதைமரபு காட்டும் பறாளை 'விநாயகர் பள்ளு

சிறுவர்களோடு விளையாடிக் கொண்டிருந்தான் சிறுவன் ஒருவன், தமிழ் நாட்டில் இருந்து வந்த அறிஞர் ஒருவர் சிறுவனைப் பார்தது வில்லவராய முதலியார் வீடு எது என்று கேட்டார். அதற்குச் சிறுவன்.

''பொன் பூச்சொரியும் பொலிந்த செழுந்தாதிறைக்கும் நன் பூதலத்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை வீசு புகழ் நல்லூரான் வில்லவராயன் கனக வாசலிடைக் கொன்றைமரம்'' என்று பாட்டினாற் பதில் கூறினான்.

அந்தச் சிறுவன் வளர்ந்து பேரும்புகழும் பெருமையும் பெற்றான். சின்னத்தம்பிப் புலவரெனப் பலராலும் பாராட்டப் பெற்றான்.

திணை கொய்யும் கிளியைக் கலைப்பதற்குக் குறப்பெண்கள் கவணிலே ஒளி பொருந்திய மணியை வைத்து வீசுகிறார்களாம். அப்படியானால் ஈழமண்டலம் எத்தகைய வளம் மிக்க நாடு என்பது விளக்கப்படுகிறது.

ஈழமண்டலத்தின் பாவலர் சிறப்பையும் அவர்க்குக் கொடுக்கும் வள்ளல்களின் சிறப்பையும் —

''பண்ணிற் றோயப் பொருண்முடிப்புக்கட்டி
பாடும் பாவலர்க் கீந்திட
வென்றே பெண்ணிப்
பொன்முடிப்புக்கட்டி
வைத்திடு மீழமண்டல
நாடெங்கணாடே'' என்று பாடுகிறார்.

பாவலர்பெருமைஉணர்ந்து அவருக்குக் கொடுக்கவென்று பொன் முடிப்புக்கட்டி வைத்திருக்கும் கொடைவள்ளல்களைக் கொண்டது ஈழநாடு என்கிறார்.

| | |
|---|---|
| நூல்: | பறாளை விநாயகர் பள்ளு |
| ஆசிரியர்: | நல்லூர் வி.சின்னத்தம்பி புலவர் |
| மறுபிரசுரம்: | அருளமிகு பறாளை ஈசுர விநாயகர் திருக்கோயில் அறங்காவலர் சபை |

மறைசை அந்தாதி, கல்வளை அந்தாதி, கரவை வேலன் கோவை, பறாளை விநாயகர் பள்ளு ஆகிய நூல்களைச் சின்னத்தம்பிப் புலவர் இயற்றினார்.

வயல்கள் சூழ்ந்து இயற்கை வளம் கொழிக்கும் புனிதமிக்க பதியே பறாளை ஆகும். அங்கு எழுந்தருளி இருக்கும் விநாயகப் பெருமான் மீது பாடப் பெற்றதேபறாளைவிநாயகர் பள்ளு என்னும் நூல்.

இந்த இனிய பக்தி இலக்கியத்தை அருள் மிகு பறாளை ஈசுர விநாயகர் திருக்கோயில் அறங்காவலர் சபை மறுபிரசுரஞ் செய்துள்ளது. அறங்காவலர் சபையின் இப்பணி தமிழ் உலகும் சமய உலகும் பெருமைப் பட வேண்டிய ஒன்றாகும்.

## நூல்வரிசை

பறாளை விநாயகப் பெருமானின் பெருங்கருணை, பறாளையின் ஊர்ப்பெருமை வயற்சிறப்பு, ஈழநாட்டின் சிறப்பு அனைத்தையும் கொண்ட இவ்வினிய நூல் பல சுவையும் மலிந்த பாடல்களைத் தன்பாற் கொண்டுள்ளது.

''நந்து தவழ நதிதனில் ஆம்பல் நனிமலரும் சுந்தரம் சேரும் பழனப்பறாளை'' என்று பறாளைப்பதியின் சிறப்பையும் ''வந்தெதிர் நின்ற கயமுகன் தன்னை வதைத்த தந்த வைந்துகரப் பிள்ளை'' என்று விநாயகப் பெருமானின் பெருங்கருணையையும் துதிப்பாடலிலேயே புலவர் கூறுகிறார்.

ஈழநாட்டு வளம் கூறும் புலவர் —

''அருவியோதையிரு
மெனுங் குன்றி
லடைந்த சாரற்
குளிர்புன மீதி
லுருவுசேர் திணைப்பூங்கதிர்
மேற்கிளி
யோச்ச வேண்டிப்
புலிநகந்தாலி
மருவு வண்குறப்
பேதையர் கட்செவி
மாசுணப் பண
நேர்கவண் மீதி
விருளி லாதமணி
வைத்தெறிந்திடு
மீழ மண்டல
நாடெங்கணாடே''
என்று பாடுகிறார்.

மழை எப்படிப் பொழிந்தது என்பதை மழை பொழியும் ஒலியைத் தன்பாற் கொண்ட யாப்பிற் பாடிய சிறப்புத் தனித்துவம் வாய்ந்தது.

கருமயிலாடக் குயிலினம்
வாடக்
கவியில மோடக் கரடி
புல்வாய்
பொருபுலியாளித் திரள்மரை
சாரற்
புறமுழை பதறிக்
கிடுகிடவே
யருகுழை தவளக்
குலமலை தகரத்
தடதிகிரியின்
முத்துதிர் தரவே
சொரிமலரகிலப்
பலமர முறியச்
சோவென மாரி
பொழிந்ததுவே

மொழி வளமும் கற்பனைச் சிறப்பும் ஈழமண்டலம் பற்றிய பல சிறப்புக் குறிப்புக்களையும் கொண்டிலங்கும் பறாளை விநாயகர் பள்ளு என்னும் இந்நூல் ஈழத்துப் பூதந் தேவனார் காலம் தொடக்கம் இன்று வரை வாழையடி வாழையாகச் செழித்துவரும் ஈழத்துக் கவி மரபைக் காட்டும் தனித்துவம் வாய்ந்த ஒன்றாக மிளிர்கிறது.

ஈழத்துக் கவிதைப் பாரம்பரியத்தை மெல்ல மெல்ல ஈழத் தமிழர்கள் மறந்து வரும் இவ்வேளையில் அருள்மிகு பறாளை ஈசுர விநாயகர் திருக்கோயில் அறங்காவலர் சபை பறாளை விநாயகர் பள்ளு என்னும் இந்நூலினை வெளியிட்டது. சைவ உலகிற்கும் தமிழ் உலகிற்கு ஆற்றிய போற்ற வேண்டிய நற்பணி ஆகும்.

அணிந்துரை, பதிப்புரை அருள்மிகு ஈசுர விநாயகர் திருக்கோயில் மூர்த்தியின் கீர்த்தி, தலச் சிறப்பு முதலிய உரை நடைப்பகுதிகள் பறாளை விநாயகர் ஆலயம் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் பலவற்றைத் தந்துள்ளன.

★

- சந்திர மௌலி -

# அன்புள்ள மகளுக்கு...

(மூன்றாம் பக்கத் தொடர்)

யள் பாதையை மறிச்சுக் கொண்டு ஒருத்தற்றை சைக்கிளை மற்றவை பிடிச்சுக் கொண்டு அவை சிரித்துக்கொண்டு கதைத்துக் கொண்டு போகயிக்கை, பின்னாலை வாற பொடியன்கள், ஆம்பிளையள் சொல்லுறதைக் கேட்டால் அதிலேயே என்னைப் போல தாய்மார் உசிரை விட்டிடுவினம். அதுமட்டுமே ஆரையாவது எதிர்த்தாப் போலை கண்டால் சயிக்கிளாலை இறங்கி நிண்டு கதைக்கலாமே ஆம்பிளைப்பிள்ளையளைப் போலை ஒரு காலை ஊண்டிக் கொண்டு நிற்பினம். பொம்பிளைப் பிள்ளையள் எண்ட கூச்சமே இல்லை. அதுக்கேத்த உடுப்பு; விதம் விதமான உடுப்புகள் பஞ்சாபியோ என்னவோ; கால்சட்டை போல ஒன்றைப் போட்டு அதுக்குமேலை ஒரு பெரியசட்டை அதுக்குமேலை ஒரு சால்வை இதுமட்டுமே? பல தினுசு நீளங்களிலை சட்டையள்.

அண்டைக்கு உன்னோடை நான் கடைக்கு வந்த நேரம் தானே அதுகளின்ரை விலைகள் தெரியும். அந்த விலைக்கு நல்ல சீலையள் வாங்கலாமே பிள்ளை.

அதுமட்டுமே தலையைப்பார்த்தால் பெரிய அலங்கோலம். எனக்கு அம்மா நல்லெண்ணை தடவி, இறுக்கிப்பின்னி ரிபன் கட்டிவிடுவா. கோயிலுக்குப் போகேக்கை குஞ்சம் கட்டி பூவைத்து விடுவா, இப்ப நான் கொண்டை போடுகிறேன். எனக்குள்ள முடி, உங்களுக்கெல்லாம் என்ரை வயசுவர எப்படியோ! அந்தககாலத்திலை கோயில்களிலை சிகரம் கட்டுகிறது உனக்குத் தெரியுமே? அதைப் போலை இப்பத்தைய பெண்பிள்ளையள் ஏதோ கணக்கக் குத்தி போதாக்குறைச்சலுக்குப் புடலங்காய்குக் கல்லுக்கட்டினது போல பெரிசா ஏதோ கட்டிவிடுதுகள். சிலதுகளின்ரை முன்னந்தலையணை கறையான் அரிச்சோ, எலிவெட்டினதோ தெரியாது. எல்லாம் கட்டை கட்டையாகப் பறக்கும், பின்னாலை பார்த்தால் எலிவால் மிச்சம் இதுகளின்ரை விலை' எல்லாம் அந்தப் பாவங்கள் வெளிநாட்டில் சஷ்டப்பட்டு அனுப்புகிற காசுதானே?.

### கல்யாணக் காட்சியா?

ஏன்பிள்ளை, உன்ரை பட்டம் பெறும் கொண்டாட்டத்துக்கு 7,500 ரூபாவுக்கு ஒரு சீலை பார்த்திருக்கிறாய் எண்டு கொப்பர் சொன்னார். உண்மை தானே? ஒருபொம்பிளை ஒரு முறை தானே கலியாணத்துக்கு மாதிரி உடுக்கிறது. இதென்னெண்டால் பட்டம் வாங்குவதுக்கும் ஒரு கலியாணக்காட்சியே? அப்ப கலியாணத்துக்கு என்ன சீலை வாங்கப்போறாய்?

உனக்கு ஒரு புதினம் எழுத வேணும். நான் அண்டைக்கு யாழ்ப்பாணம் போகேக்கை வானிலை நாலைஞ்சு பெட்டையள் இருந்தினம். ஒரு சோதனைச் சாவடிக்கும் கிட்ட எனக்கு முன்னாலை இருந்த இரண்டு பேரிலை ஒருத்தி ''எடியே இறங்க வேணுமே? இல்லாட்டி அது நிக்குமோ ? ஓம் ஓம் அது தான் நிக்குது. பேசாமை இரு. என்னடி முகமெல்லாம் அதுக்குக் காயமாய் கிடக்குது. என்ன நடந்துதோ தெரியாது'' என்றாள் இப்படி அவையள் கதைத்துக் கொண்டிருக்கேக்கை, ''அந்த அது''ஏறி ஒரு சிரிப்போடை பின்னுக்குப் போச்சுது, அங்கை ஆரோ ஒரு பெட்டை குசலம் விசாரிக்க, தான் மோட்டார் சைக்கிளாலை விழுந்து காயமெண்டு சொல்லிக்கேட்டுது இதை நான் மட்டுமே, என்னைப் போலை ஆண், பெண் எல்லாரும் கேட்டு மலைச்சுப் போச்சினம்.

பிள்ளை, உன்னைக் கும்பிட்டுக் கேக்கிறன் நீ கவனமாய்ப்போய்வா. நீ நாளைக்குக் கலியாணச் சந்தையிலை விலை போக வேணும் பிள்ளை. அப்படித்தான் இல்லையெண்டு போனாலும் நிம்மதியாச் சீவிக்க வேணும். உனக்கு இது விளங்கஅது. உன்ரை கொண்ணன்மார் உன்னைக் கண் கலங்காமை வைச்சிருக்கட்டாம். இப்ப நான் உன்னைச் சீராக வளக்காவிட்டால் நாளைக்கு நீ கலங்கிறபோது அவையே வரப் போயினம். இப்ப தங்கச்சி, தங்கச்சியெண்டு எல்லாம் செய்வினம். தனக்குத் தனக்கெண்டு குடும்பம் வந்த பிறகு நான் யாரோ நீ யாரோ. அதுதான் பிள்ளை, இப்ப காசு கணக்கில்லாமல் மடியிலை கிடக்குதெண்டு எங்களை நாங்கள் கெடுத்துக் கொள்ளக் கூடாது. இப்ப யாழ்ப்பாணத்திலை, ஏன் தமிழ்ச் சனத்திலை பொம்பிளையள்தானே எண்ணுக் கணக்கில்லாமல் இருக்கினம். ஏன் உன்ரை சித்திக்கும் மூண்டு குமருகள் தெரியுந்தானே.

நான் என்ர நெஞ்சுக்குள்ளை இருந்ததைக் கூறிவிட்டன். நீ படிச்சவள், வளர்ந்த பிள்ளை. உன்ரை எதிர் காலத்தை நீயே சீராக அமைச்சுக் கொள். இந்தக் கடிதத்தை வாசித்துப் போட்டு வராமை நிண்டு விடாதை, நான் உன்ரை அம்மா. இவையெல்லாம் உன்ரை நல்லதுக்குத்தான் எழுதினனான்.

உன் பிரியமுள்ள
அம்மா

# 4 கிராம அலுவலர்கள் தரம் - 1 க்கு பதவி உயர்வு

நெல்லியடி ஜூன் 28

பருத்தித்துறைபிரதேச செயலர் பிரிவிலுள்ள நான்கு கிராம சேவை அலுவலர்கள் திறமை அடிப்படையில் தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

துன்னாலை வடக்குகிராம சேவை அலுவலர் எஸ். சிவராஜா, தும்பளை கிராம சேவை அலுவலர் க. சிவலிங்கம், மந்திகை கிராமசேவை அலுவலர் செ. அ. ஞானச்சந்திரன், பருத்தித்ததுறை கிராமசேவை அலுவலர் த. நந்தகுமார்ஆகிய நான்கு பேர்களுமே தரம் ஒன்றிற்கு 1–1–93இலிருந்து பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கடிதங்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன, (ஐ–109

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர்


**சிதம்பரப்பிள்ளை துரைராஜசிங்கம்**

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர், அலுவலக உத்தியோகத்தர்
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

(57166)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 30 |
| 09 | 05 |
| 1927 | 1998 |

அமரர்

**இராமலிங்கம் தர்மலிங்கம்**

30 — 05 — 1998 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தந்தையாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

31 ஆம் நாள் (29 - 06 - 98) வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 2, பிறவுண் வீதி,
நீராவியடி.

(57127)

# நுணுக்கு காட்டிகள் வந்தன

திருநெல்வேலி, ஜூன் 28

'யுனிசெவ்' நிறுவனம் யாழ். சுகாதார திணைக்களத்திற்கு நுணுக்கு காட்டிகளையும் (Microscope) வைத்தியசாலைகளுக்குத் தேவையான ஆய்வுகூட இரசாயன உபகரணங்களையும் வழங்கியுள்ளது. இவ்வாரம் இங்கு வந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கப்பலில் கொழும்பிலிருந்து இவை எடுத்து வரப்பட்டுள்ளன.

(ஐ–135)

# குழந்தை மரணம்

திருகோணமலை, ஜூன் 28

யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலை முகாமில் தங்கியிருந்த அச்சுவேலியைச் சேர்ந்த சுதாகரன் பிரதீப்குமார் என்ற இரு வயதுக் குழந்தை உயிரிழந்தது.

அகதி முகாமில் பரவிய சளி நோய் காரணமாகவே குழந்தை உயிரிழந்தது.

மற்றும் பலர் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ–3)

# விளையாட்டு உபகரணம் வழங்கல்

தென்மராட்சி, ஜூன் 28

பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் ஜீ. ரி. சற் நிறுவனத்தினரால் அண்மையில் வழங்கப்பட்டன.

வேம்பொடு கேணி சீ. சீ. த. க. பாடசாலை, மாசார் அ. த. க. பாடசாலை ஆகியவற்றுக்கே விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிறுவனத்தின் சமூகசேவைகள் இணைப்பாளர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன், நிறுவனப் பிரதிநிதி ரெப்பென், பளை பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி, கோட்டக் கல்வி அலுவலர் அ. கயிலாயபிள்ளை உட்பட பலர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(ஐ–117)

யா / கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

# வைரவிழா

வித்தியாலய வைரவிழாவைச் சிறப்பாக நடத்துவதென வித்தியாலய பழைய மாணவர் சங்கம் அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து உரிய ஒழுங்குகளை ஆரம்பித்துள்ளது. இதன் அங்கமாக வைர விழாமலர் வெளியிடுதல், இருநாள், கலை விழா நடத்துதல், பாடசாலை மாணவரிடையே போட்டிகள் வைத்தல், பாடசாலை வளர்ச்சிக்கு அயராது உழைத்தோரைக் கௌரவித்தல் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவைச் சிறப்புற நடத்துவதற்கு பழைய மாணவர்கள், வித்தியாலயத்தில் அதிபர், ஆசிரியராகக் கடமையாற்றியோர், பெற்றோர், நலன் விரும்பிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறும், விழா சம்பந்தமான தங்கள் ஆலோசனைகள், தகவல்களை அதிபரிடம் சமர்ப்பித்து, மேலதிக விவரமேதும் தேவைப்படுவோர் அதுபற்றி அதிபரிடம் அறிந்து கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வைரவிழாவையொட்டி வித்தியாலய பழைய மாணவர் சங்கம் கல்வி வளர்ச்சி நிதியம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளது. பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளதால் வித்தியாலயத்தில் கற்ற பழைய மாணவர்கள் தமது விவரங்களை சங்க செயலாளர் அல்லது பொருளாளரிடம் சமர்ப்பித்து அங்கத்துவ விண்ணப்பத்தை உறுதி செய்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நா. சண்முகரத்தினம் — தலைவர் (அதிபர்)
ச. குணசிங்கம் — (பொருளாளர்)
பொ. விக்னேஸ்வரசிங்கம் — (செயலாளர்)

வித்தியாலய பழைய மாணவர்சங்கம்

(57154)

இதோ!

**யாழ். நகரில்**

உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உகந்த உன்னத தொலைபேசிச் சேவை

யாழ். ஆஸ்பத்திரி முன்பாக

**ஒளியகம் தொலைத் தொடர்பு நிலையம்**

''உங்கள் தேவையே எங்கள் சேவை''

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள:

**ஒளியகம்**

தொலைத் தொடர்பு நிலையம்
இல. 60, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

எமது சேவை நேரம்
காலை 6மணி முதல் மாலை 7 மணிவரை
தொலைபேசி இல. 2070

(சி/4113)

# நினைவஞ்சலி

## 1 ஆம் ஆண்டு — 7 ஆம் ஆண்டு





திருமதி
செல்லையா புவனேஸ்வரி

மலர்வு 08–08–1935 — உதிர்வு 09–07–1997

செல்வி
செல்லையா சாந்தினி

மலர்வு இலங்கை 25–06–1964 — உதிர்வு இந்தியா 24–03–1991

திதி: 28 - 06 - 1998

நிழற் படமாய் நீயிருக்க
நிம்மதியின்றி நாமிருந்து
சோகத்தைச் சொல்லி அழ
சொந்தங்கள் இங்கில்லை
காலத்தின் கோலத்தால்
காவலூரில் உனையிழந்து
காலமெல்லாம் கண்ணீர் வடிக்கின்றோம்.

சி. செல்லையா,
ஸ்ரீ பவனம்,
பலாலி மத்தி
வசாவிளான்.

கணவர், பிள்ளைகள், சகோதரங்கள்,
பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கரம்பன் மேற்கு,
[illegible]

(56853)

உயர்திரு.

# முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகள் 13 ஆவது ஆண்டு குருபூசைத் தினம்

30 - 07 - 1998

மயில்வாகனம் சுவாமிகளின்
13 ஆவது ஆண்டு
குருபூசைத் தினப் போட்டிகள் - 1998

1. குறட்பா அறிவுப் போட்டி
2. பேச்சுப் போட்டி

பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பிரிவு | I | ஆண்டு | 6 — 7 |
| பிரிவு | II | ஆண்டு | 8 — 9 |
| பிரிவு | III | ஆண்டு | 10 — 11 |

ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாணவன் குறட்பா அறிவுப் போட்டியிலும், பேச்சுப் போட்டியிலும் பங்கு பற்ற அனுமதிக்கப்படுவர்.

பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் ஆண்டு, பிறந்ததிகதி, பாடசாலை என்பவற்றின் விவரங்களை அதிபர் மூலம் அல்லது தமது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி 10 – 07 - 1998 இற்கு முன் தபால் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம். விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு போட்டி பற்றிய விவரங்கள் அனுப்பி வைக்கப்படும்.

போட்டிகள் 26 – 07 - 98 இல் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 30 - 07 – 98 இல் நடைபெறும் குரு பூசைத் தினத்தில் பணத் தொகையும், பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;

குருபூசைப் போட்டிக்குழு
சந்நிதியான் ஆச்சிரமம்.

தொண்டமானாறு.

(சி-4126)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளர்களின் பிரச்சினை குறித்து ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ் மாவட்டத்தில் கடல் வலயத் தடைச் சட்டத்தை நீக்குதல், ஆழ் கடல் மீன் பிடிக்கு வெளியிணைப்பு இயந்திரத்தைப் பாவிப்பதற்கு அனுமதித்தல் உட்பட யாழ் மாவட்டக் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பத்துக் கோரிக்கைகளை முன்வைத்து ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மகஜரொன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகக் கடல் வள அபிவிருத்தி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்' தொடர்பான கலந்துரையாடலின் இறுதியில் ஜனாதிபதிக்கு இந்த மகஜரை அனுப்பி வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பேராசிரியர் கா. சித்திரவடிவேலு தலைமையில் கடந்தவியாழனன்று நடைபெற்ற இக் கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் வி.க. கணேசலிங்கம், விரிவுரையாளர் ஏ. எஸ். சூசை, கடற்றொழில் விரிவாக்க அலுவலர் எஸ். யோசப், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் ஆகியோர் கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக உரையாற்றினார்கள்.

★ விமானம் மூலம் கடல் உணவுப் பொருள்களை கொழும்புக்கு அனுப்புதல்.

★ கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்தல், கண்காணித்தல், சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சியளித்தல்.

★ வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் பனிக்கட்டி தொழிற்சாலையைத் திறக்க நடவடிக்கை எடுத்தல்.

★ ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் பாட இல. 76 ஆகவுள்ள கடலக வளம் பாடத்தை பாடசாலைகளில் புகுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

★ குருநகரில் உள்ள யாழ். மாவட்ட மீனவ பயிற்சிக் கல்லூரியைப் புனரமைத்து மீள இயங்கவைத்தல்.

★ பலாலி மயிலிட்டி, வெற்றிலைக்கேணி, அரியாலை கிழக்குப், பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மீனவ குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

★ கடற்றொழிலாளர்களுக்கான கடனுதவிகளை வங்கிகள் இலகுவாக்குதல்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஜனாதிபதிக்கும் கடற்றொழில் அமைச்சுக்கும் மகஜர்கள் அனுப்புவதாகவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ-5-ரீ)

## வன்னியில் இருந்து வந்த 550 குடும்பங்களுக்கு ரூ 5,000 கொடுப்பனவு

தென்மராட்சி, ஜூன் 28

வன்னிப் பகுதியிலிருந்து பளைப்பிரதேசத்தில் உள்ள தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறிய 550 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா பளைப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் ஒரு தொகுதியினருக்கு அடுத்த மாத நடுப்பகுதியில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தெரிவித்தார். (ஐ-117)

## அடித்துக்கொலை

நெற்கில் 10—க்கும் மேற்பட்ட கொலைகளைப் புரிந்ததாகத் தேடப்பட்டு வந்த ஒருவர் நேற்று முன் தினம் 20 பேர் கொண்ட கும்பலால் அடித்தும், வெட்டியும் கொல்லப்பட்டார்.

தனமல்வில என்னும் இடத்தைச் சேர்ந்த மாதெனிய என்ற நபரே கொல்லப்பட்டவராவார். (ஐ-3)

# அடிப்படை மனித உரிமை மீறல்களை நேரடியாகத் தலையிட்டு நிறுத்துக!

## ஜனாதிபதிக்கு மனித நீதிக்கான குழு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 28

அரசினால் மேற்கொள்ளப்படும் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமை மீறல்களில் நேரடியாகத் தலையிட்டு அவை நிரந்தரமாக நிறுத்தப்படுவதற்கு ஆவன செய்யுங்கள்.

மனித நீதிக்கான போராட்டக்குழு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு கேட்டிருககிறது.

தமிழ் அரசியற் கட்சிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மனித நீதிக்கான போராட்டக்குழுவினால் மனித உரிமைகள் தினமான நேற்று முன்தினம் நல்லூரில் அடையாள உண்ணா விரதப் போராட்டம் நடத்தப்பட்டது, அந்த உண்ணா விரதப் போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட மகஜரிலேயேமேற்கண்டகோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது நாட்டின் இராணுவ முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும், பொலிஸ் நிலையங்களிலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவி இலங்கைத் தமிழ்மக்கள் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். பல்வேறுபட்ட தமிழ் அரசியற் கட்சிகள், மனித உரிமை அமைப்புகள், பொது நிறுவனங்கள் ஆகியன இது தொடர்பாக பல தடவை உங்கள் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்கள். அதே சமயம் இக் கைதிகள் உங்கள் கவனத்தையும் தங்கள்பால் ஈர்ப்பதற்கு பல அகிம்சை வழிப் போராட்டத்தை நடத்தியும் கூடதனது நாட்டின்ஒரு பகுதி குடிமக்களான இத்தமிழ்க் கைதிகள் தொடர்பாக இவ்வரசாங்கத்தின் நிலைப்பாட்டில் ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

நீதித்துறையின் முன் நிறுத்தப்பட்டு தாம் நிரபராதிகள் என்பதை நிரூபிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தையே இவர்கள் வேண்டி நிற்கின்றார்கள்.

எந்த ஓர் அரசாங்கமும் மக்களின் அடிப்படை உரிமைகளைத் தனது குடிமக்களின் ஒரு பகுதியினருக்கு மறுதலிப்பதானது நாகரிகமடைந்த சர்வதேச சமுகத்தால் கண்டிக்கப்படும் என எண்ணுகின்றோம். தமது நிரபராதித்தன்மையை நிரூபிப்பதற்கான எல்லாவிதமான முயற்சிகளும் தோல்வியடைந்த சூழ்நிலையில் இக்கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்துவதன் மூலமாவது தமக்கு நீதி கிடைக்குமென எதிர்பார்க்கின்றார்கள்.

இந்நாட்டு தமிழ் மக்கள் மூன்றாந் தர குடிமக்களாக அரசினால் நடத்தப்பட்டு வந்தபோதும்கூட உங்களால் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளும், மனித உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையின் நிமித்தமே உங்களுக்கு வாக்களித்தார்கள் என்பதை இச் சூழ்நிலையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆனால் இந்த நம்பிக்கை மிக வேகமாக அற்றுப்போவதையிட்டு நாம் மிகவும் மனவேதனை அடைகின்றோம். 1996 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் காணாமற் போன தமிழ் மக்களின் பெற்றோர்களதும், அன்புக்குரியவர்களதும் மனவேதனைகளை அவர்களை நீங்கள் நேரில் சந்தித்தபோது புரிந்து கொண்டிருப்பீர்கள். இந் நிலைமைகள் தொடர்பாகச் சரியான மாற்றங்களை ஏற்படுத்துவதாக நீங்கள் உறுதி மொழிகள் அளித்திருந்தும் கூட நடைமுறையில் அரசினால் எந்த ஒரு தீர்வும் இவர்களுக்குக் கிட்டவில்லை என்பதே உண்மை.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டம் சுதந்திரபுரத்தில் சிறிலங்கா விமானப் படையினரால் குடிமக்கள் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலால் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இச் செயற்பாடானது கண்மூடித் தனமான தனது குண்டு வீச்சுக்கள் மூலம் தனது குடிமக்களின் ஒரு பகுதியினரை அடிபணிய வைக்கும் முன்னைய அரசின் இராணுவ மூலோபாயத்தையே எமக்கு நினைவூட்டுகிறது.

ஆகவே சகல தமிழ்க் கட்சிகளையும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய மனித நீதிக்கான நடவடிக்கைக் குழுவாகிய நாம் அரசினால் மேற்கொள்ளப்படும் இத்தகைய அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமை மீறல்களில் கௌரவ ஜனாதிபதியாகிய நீங்கள் நேரடியாகத் தலையிட்டு நிரந்தரமாக இவை நிறுத்தப் படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். தவறும் பட்சத்தில் தமிழ் மக்கள் அரசிடம் இருந்து அந்நியப்படும் தன்மை மேலோங்குவதுடன் ஒரே நாடு, ஒரே [illegible] என்று உள்ளது.

(ஐ)


# MODERN LONDON STAR

SOFTWARE POINT,
COMPUTER TRAINING DIVISION

Bank Lane, Chavakachcheri.

☐ Diploma in Software Engineering
☐ Diploma in Windows Applications
Win 95 MS Word
MS Excel MS Powerpoint
☐ Certificate in Desktop Publishing (Type Setting)

மேற்படி வகுப்புகள் எமது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இதற்கான அனுமதிப்பத்திரங்களையும் பரீட்சை விவரங்களையும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

இதர சேவைகளாக

- Computer Laser Printing.
- Computer Colour scanning.
- Photo Copying.
- Laminating மேற் கொள்ளப்படுகின்றன.

- Director

(57126)



''நம்பிக்கை கொண்டோர்க்குத் தும்பிக்கையான் துணை''

— பறாளாய் தொண்டர் சபை

இன்று(28 - 06 - 1998) சுழிபுரம் பறாளாய்

## ஈசுர விநாயகரின் வேட்டைத் திருவிழா

சோழியூரான் - பிறைசூடிக்குரு

(57179)



## ஆழ்ந்த அனுதாபம்

அறவழிப் போராட்டக் குழுவின் ஸ்தாபகத் தலைவர்
திரு. வீ. எஸ். துரைராசா
(கனடா)
அவர்களின் பாசமிகு தந்தையாகிய
திரு. வினாசித்தம்பி சுந்தரம்
அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அறவழிப் போராட்டக்குழு தலைவர்,
இயக்குநர்கள், ஊழியர்கள்,
ஆசிரியர்கள.

NVDAG

(57168)



## THIRD YEAR REMEMBERANCE

28 - 06 - 1998



SWAMINATHAN BALACHANDRAN

B. Sc. Dip. (Edu.) Cey.
Director, Undergraduate Dept. &
Retd. Teacher
Jaffna College, Vaddukoddai

What a happy family we were together and their one fine day the light of the family was gone. The tears in my eyes could wipe away. But the pain and ache in my heart will never fade away.

Your ever loving wife
Grace

(57066)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அடிக்கடி மாறும் அரசின் முடிவு

சணம் வாதம், சணம் பித்தம் பிடித்தவன் போல அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் குறித்து நாளுக்கு நாள் வெவ்வேறு முடிவுகளை எடுத்து வருகிறது.

தென்னிலங்கையிலுள்ள மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிந்தது என்ற பேச்செழுந்ததுமே அவற்றுக்குரிய தேர்தல்கள் நடத்துவதற்கு அரசாங்கம் ஆரம்பத்திலேயே பின்னடித்து வந்தது. இறுதியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை அணுகி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸும், உள்நாட்டு அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவும் மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைப்புக்கு அவரின் ஒத்துழைப்புப் பெறமுயன்றனர். இதன் பெறுபேறாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அங்கும் இங்கும், அவரும் இவரும், பேசுவதும் கலந்தாலோசிப்பதும் என்ற நடவடிக்கைகளின் முடிவு கடந்த புதன்கிழமை நடந்த அரசமைப்புக் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தல்களை இவ்வருடம் டிசம்பர் 31 வரை ஒத்திவைப்பதென தீர்மானிப்பதில் முடிந்தது. வியாழக்கிழமை நடந்த வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் இந்த முடிவை உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருந்தார். இந்த முடிவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணிலின் ஆதரவும் பெறப்பட்டதாக அப்போது தெரிவிக்கப்பட்டது.

வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாராக இருந்தால் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு தமது கட்சி ஒத்துழைப்பு நல்குமென எதிர்க்கட்சித்தலைவர் ஏற்கனவே தெரிவித்திருந்தார். இத்தகைய ஓர் ஏற்பாட்டினால் மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதான அரசின் அறிவிப்பை மக்கள் முற்று முழுதாக நம்பினர்.

ஆனால் சனிக்கிழமை நடந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்த முடிவுதலைகீழாகமாறியது

ஆளும்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையில் நடந்த பேச்சுக்களின் விவரம்- உண்மை மக்களுக்குத் தெரியாது. இரு சாராரும் ஒருவரின் மீது மற்றவர் பழி சுமத்தும் வகையில் தகவல்களையும் அறிக்கைகளையும் வெளியிட்டு வருகின்றனர்.

மாகாண சபைத்தேர்தல்களை நடத்துவதானால் அதற்குப் போதிய பாதுகாப்பளிக்க முடியாது என்ற காரணத்தைக் காட்டியே அரசாங்கம் அத்தேர்தல்களை முன்னர் ஒத்திப்போட முனைந்தது அவ்வாறிருக்க புதிய முடிவின் பிரகாரம் தேர்தல்களை நடத்துவதாக இருந்தால் அதற்குரியபாதுகாப்பு இனி எங்கிருந்து வரப் போகிறது? அதற்கு முன்னர் ''வெற்றி உறுதி'' வெற்றி கண்டுவிடும் என்ற கணிப்போ! இவையெல்லாமே, தமது வசதி வாய்ப்புகளைக் கருதி மக்களை ஏமாற்றும், ஏய்க்காட்டும் அணுகுமுறைகளாகவே இருக்கின்றன.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 28

சித்தன்கேணி தனுவோடைப்பதி ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான பஞ்சரதோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் தீர்த்தோற்சவம் மறுநாள் 10 மணிக்கும் நடைபெறவுள்ளன.

தேர்த் திருவிழாவன்று காலை 10.30மணிக்கு மகோற்சவகால சமயபாடப் போட்டிப்பரிசளிப்பு வைபவம் இடம்பெறவுள்ளது. (ஐ-28-30)

★ ★ ★

கைதடி கயற்றசிட்டி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன்கோயில் தேர்த்திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கும், தீர்த்தத்திருவிழா மறுநாள் 9.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. (ஐ-8-11)

★ ★ ★

தென்புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்தமாதம் 6 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், மறுநாள் 7ஆம் திகதி சப்பறமும் 8ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் 9 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெற்று 11ஆம் நாளாகிய 10 ஆம் திகதி பூங்காவனத்துடன் உற்சவம் முடிவடையும். (ஐ-8-109-173)

★ ★ ★

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான மண்டலாபிஷேகப் பூர்த்திவிழாவை முன்னிட்டு சங்காபிஷேகமும், அன்னதானமும் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 8மணி முதல் நடைபெறவுள்ளன. (ஐ-8)

★ ★ ★

சண்டிலிப்பாய் அருள்மிகு கல்வளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது. (ஐ-8-15)

★ ★ ★

புலோலி பார்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் ஆலய சவன் தேர்த் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கும், மறுநாள் காலை நடேசஅபிஷேகமும், தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. (ஐ-30-173)

★ ★ ★

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாள்கள் நடைபெற உள்ளன.

அடுத்த மாதம் 6 ஆம்திகதி வேட்டைத் திருவிழாவும் 7 ஆம் திகதி சப்பறமும் 8 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ-152)

## உதை பந்தாட்டம்

யாழ். மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் புதன்கிழமை முதலாம்திகதி ஆரம்பமாகின்றது.

அன்று துரையப்பா விளையாட்டரங்கில் பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 3.00மணி:- தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு அணி எதிர் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுஅணி

★ 4.00 மணி:- சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு அணி எதிர் கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவு அணி. (உ)

## 184 ஆண்டு நிறைவு விழா

மெதடிஸ்த திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டு184 வருடங்கள் பூர்த்தியடைவதை கொண்டாடும் வகையில் நாளை திங்கட்கிழமை நாடு முழுவதிலும் உள்ள மெதடிஸ்த திருச்சபை ஆலயங்களிலும் நன்றி செலுத்தும் ஸ்தோத்திர வழிபாடு இடம் பெறவிருக்கிறது. (ஐ-109

## குடும்பநல சேவையாளர் பதவிக்கு 44 பேர் தெரிவு

யாழ். மாவட்டத்திலிருந்து குடும்பநல சேவை உத்தியோகத்தர் பயிற்சிக்கு 44 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு இதற்கான விண்ணப்பங்களை அண்மையில்கோரியிருந்தது. இதற்கு விண்ணப்பித்தவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மேற்படி 44 பேருக்கும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ். தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. பயிற்சிக்கான அனுமதிக் கடிதங்களை கொழும்பிலுள்ள தொற்றாத்தன்மையுள்ள சமூக நோய்களுக்கானபணிப்பாளர் டாக்டர் வி. சிறிகாந்தா நேரடியாக இங்கு கொண்டுவந்து யாழ். சுகாதார சேவை பிரதிமாகாணப் பணிப்பாளரிடம் கையளித்தார். இந்தக் கடிதங்கள் 44 பேருக்கும் தபால் மூலம் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகபணிப்பாளர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் எஸ். மகேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இப்பயிற்சிக்கு கிளிநொச்சி,மன்னார், வவுனியா மாவட்டங்களிலிருந்து விண்ணப்பித்தவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கான கடிதங்களை அவர்களுக்கு தபாலில் அனுப்பி வைப்பதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதால் கொழும்பிலுள்ள பணிப்பாளரிடம் அவை திருப்பிக் கொடுத்து அனுப்பப்பட்டுள்ளன. (ஐ-135)

### நாளை

ஆனி - 15

திங்கட்கிழமை

திதி: பஞ்சமி

முற்பகல் 09.26 வரை.

நட்சத்திரம்: மகம்

முற்பகல் 9.40 வரை.

குமார சஷ்டி விரதம்

சுபநேரம் 11.56 - 01.26

ராகுகாலம்: 07.[illegible] - [illegible].56

(பஞ்சாங்கம் [illegible] பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மூடன் வெற்றியடைவதும், அறிவாளி தோல்வியடைவ[illegible] இந்த [illegible] இயல்பான [illegible]ங்கள்.

- அரேபியப் பழமொழி

# செய்திக் கொத்து

### பிரியாவிடை வைபவம்

வலி. வடக்கு ஜூ. 28

வலி.வடக்குபிரதேசசபையின் விசேடஆணையாளர் ந. வேதநாயகனுக்கு வலி. வடக்குபிரதேசசபை ஊழியர்களினால் பிரியாவிடை வைபவம் நடத்தப்பட்டது. வலி. வடக்கு பிரதேச சபைச் செயலாளர் க. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உப பணிமனையைச் சேர்ந்த ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-86)

### கௌரவிப்பு

நவாலி, ஜூன் 28

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் தேவஸ்தான வெகுதானிய வருஷ அலங்கார உற்சவ கிரிகைகளை நெறிப்படுத்தி நடத்திய கொக்குவில் நந்தாவில் மனோன்மணி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு கிரியாஜோதி பிரம்மஸ்ரீ ந. சபாரத்தினக்குருக்கள் அண்மையில் தேவஸ்தான மண்டபத்தில் பரிபாலன சபையினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். (ஐ-100-30)

### விளையாட்டு உபகரணங்கள்

நவாலி, ஜூன் 28

யுனிசெவ் நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள பாலர் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென யாழ். செயலகத்திடம் கையளிக்கப்பட்ட ஒருதொகுதி விளையாட்டு உபகரணங்கள் தற்போது திட்டமிடல் பிரிவினரால் பதிவு செய்யப்பட்ட பாலர் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (ஐ-100)

### பஸ் கட்டணம் உயர்வு

நெல்லியடி, ஜூன் 28

வடமராட்சி சிற்றூர்தி சேவைச்சங்கத்தின் கீழ் சேவைபுரியும் மினிபஸ்களுக்கான பருத்தித்துறை — யாழ்ப்பாணம் கட்டணம் மேலும் இரண்டு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒயில் விலையேற்றம் சாரணமாகவே தற்பொழுது இரண்டு ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் பத்துரூபா கட்டணமாக பெறப்பட்டது. தற்பொழுது பன்னிரண்டு ரூபா அறவிடப்பட்டு வருகின்றது. (ஐ-109-15)

### மூக்குக் கண்ணாடி அன்பளிப்பு

சண்டிலிப்பாய், ஜூன் 28

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்திற்கு கொழும்பிலுள்ள 306 'பி' மாவட்ட லயன்ஸ் உப ஆளுநராகப் பதவி ஏற்கவிருக்கும் லயன் டாக்டர் என். இயன் 50 மூக்கு கண்ணாடிகளை அன்பளிப்புச் செய்துள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்ற கழகத் தலைவர் லயன் ஏ. சி. செபநாயகம் அவற்றை இங்கு எடுத்து வந்துள்ளார்.

கண் பரிசோதனை முகாமில் தெரிவு செய்யப்பட்ட வசதி குறைந்த நிலையிலுள்ள கண்பார்வை குறைந்தவர்களுக்கு விரைவில் இக்கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-135

### பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் பழைய மாணவர்கள் இணைந்து கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் ஒன்றை ஸ்தாபித்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட பழைய மாணவர் சங்கத்தின் கூட்டம் கடந்த வாரம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பழைய மாணவர் சங்கச் செயற்பாட்டிற்கான நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-15)

### பிக்கப் வாகனம் கையளிப்பு

நவாலி, ஜூன் 28

கொழும்பிலிருந்து யாழ். செயலகத்திற்குக் கடந்த வாரம் வந்து சேர்ந்த பிக்கப் வாகனங்கள் இரண்டும் பிரதேச செயலகங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஒன்று சண்டிலிப்பாய், சங்கானைப் பிரதேச செயலகங்களுக்கும், மற்றையது கரவெட்டி, பருத்தித்துறைப் பிரதேச செயலகங்களின் பாவனைக்கும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-100)

### ஐ. நா. நிதியம் பொருளுதவி

வட்டுக்கோட்டை, ஜூன் 28

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகப் பகுதியில் 1998 மே மாதத்தில் மீளக்குடியமர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 52 குடும்பங்களுக்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் உணவுப் பொருள்கள் அல்லாத வீட்டுப் பாவனைப் பொருள்களை அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கியுள்ளது. (ஐ-8-12)

### சத்திர சிகிச்சை உபகரணம்

திருநெல்வேலி, ஜூன் 28

யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு சிறு சத்திர சிகிச்சை உபகரணங்கள், ஊசி போடும் ''சிறிஞ்சுகள்'' என்பன செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் கடந்த வாரம் எடுத்து வரப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இவற்றைப் பங்கீடு செய்து விநியோகிப்பதற்கு யாழ். சுகாதார திணைக்கள மருந்து விநியோகப் பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஐ-135)

### பணிப்பாளர் நியமனம்

கொழும்பு சுகாதார அமைச்சின் தொற்றாத தன்மையுள்ள சமூக நோய்களுக்கான பணிப்பாளராக டாக்டர் வி. சிறிகாந்தா நியமிக்கப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இவர் மானிப்பாய், தெல்லிப்பழை பிரிவு சுகாதார வைத்திய அதிகாரியாகவும் யாழ். சுகாதார பிராந்திய பணிப்பாளராகவும், பின்னர் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரசேவை பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். (ஐ-135-15)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் வேண்டும்

கனடாவில் வசிப்பவருக்கு கௌரவ குடும்ப 30வயதிற்கு மேற்படாத செவ்வாய் தோஷம் பெற்றபெண் வேண்டும். ஆர்வமுடையோர்பெண்ணின் பிறந்த நேரம் உட்பட சகல விவரங்களும் அடங்கிய குறிப்பை தபால்மூலம் இவ் விளம்பர இலக்கத்திற்கு உதயன் காரியாலயத்திற்கு அனுப்பவும். இல.751,மே/பா உதயன். [57151]

## மணமகன் தேவை

அச்சுவினி நட்சத்திரம் 28 வயது, 60 பாவம், கௌரவ குடும்பத்தில் உள்ள பட்டதாரிமணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. B Sc. கணக்காளர், வைத்தியர், பொறியியலாளர் மணமகன் விரும்பத் தக்கது. தொடர்பு: செ. விஜயரத்தினம், முருகன் திருமண சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். [57174]

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பெண்கள் ''ஏசியா'' துவிச்சக்கர வண்டி விற்பனைக்கு உண்டு, சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [57156]

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட நசனல் G15 370 T.V. Sony 20 30, தரமான டெக்குகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: க. விஜயஜீவன், மல்வம் குறுக்குத் தெரு, உடுவில். [57172]

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 101, பலாலி வீதி, (இலுப்பையடிச் சந்தி, அருகில்) கந்தர் மடம் யாழ்ப்பாணம். (வாடிக்கையாளருக்கு சந்தை விலையில் குறைத்துக் கொடுக்சப்படும்.) [57148]

## இறைச்சிக்கோழி

இறைச்சிககோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. சில்லறையாகவும். மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு– No. 68, Old Park Road, Jaffna. [57157]

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. 1Kg 160/–. சுத்தம் செய்துகொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில்வீதி யாழ்ப்பாணம், [57149]

இறைச்சிககோழி, புறோயிலர் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல.15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சின்னக்கடை அருகில்) [57133]

BAIRAHA FARM. TASTY BROIL ERS FOR SALE பகிறா சுவையான இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. $1\frac{1}{2}$கிலோ விலிருந்துவிற்பனையாகிறது. சுத்தம் செய்து கொடுக்கப்படும். [5] 17 கோயில் வீதி, யாழ்ப்பாணம். (57155)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கில மூலம் ஆங்கிலம்பயில இங்கிலாந்தில் பயிற்சிபெற்ற ஆசிரியர் த. விக்கினேஸ்வரன் ஆச்சாரி அவர்களால் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஆங்கிலக் கல்வி நிலையம், 426, (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். [57100]

## பத்தாயம் விற்பனைக்கு

$7\frac{1}{2}$ அடி நீளமும், 4அடி அகலமும், $4\frac{1}{2}$ அடி உயரமும் உள்ள பத்தாயம் விற்பனைக் குண்டு. இ. சிறீஸ்கந்தராஜா மயில ணிஒழுங்கை, சுன்னாகம். 57159]

## தவறிவிட்டது

நீல நிற சிறிய டையரி ஆவணங்களுடன் காணாமற் போய் விட்டது. முச்சக்கர வண்டியில் பின்னால் வந்தவரால் எடுக்கப்பட்டதாக அறிந்தோம். தயவுடன் 281, கண்டி வீதி, அரியாலை கிழக்கில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் உண்டு. (57175)

சரவணை மேற்கு வேலணையைச்சேர்ந்தஅன்னம்மா நாகேசஎன்பவரின் 427542874V இலக்க தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் ஊர்காவற்றுறை பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் 26, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [57165]

## பியானோ விற்பனைக்கு

பழைய பியானோ விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். ரத்தினம், 51, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (57152)

## ENGLISH

பாடசாலை / பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள், நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியவர்களுக்கான பிரத்தியேக ஆங்கிலமொழி, இலக்கிய வகுப்புகள் நடைபெறுகின்றன. விவரங்களுக்கு வ. கோவிந்தபிள்ளை, 62, பழம் றோட், கந்தர்மடம். [57169]

## அளவையியல் - 2000A/L

A/L 2000 வகுப்புக்களிற்கான அளவையியல் பாடபிரத்தியேகவகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு: இல 17, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (57162)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க நூலான

### பொது அறிவுப் பூங்கா வெளியீட்டு விழா

இடம்: சிற்றி ஹோல், யாழ் நகர் (செம்மாதெரு)

காலம்: 28 – 06 - 98 இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 30 மணிக்கு

ஆய்வுரைகள், சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

ஆர்வமுள்ளோர் வந்து கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க<br>இலங்கைக் கிளை<br>52, ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு

**விக்னா கல்வி நிறுவனம்**

(57181)

### இராஜ ராகங்கள்

யாழ். சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய நிதிக்காக ஆலய இளைஞர் குருமத்தின் அமைப்பில்

**சாரங்கா இசைக்குழுவினர்**

வழங்கும் இராஜ ராகங்கள்.

இன்றைய இளம் பாடக, பாடகிகள் ஒரே மேடையில் பங்கேற்கின்றனர்

காணத் தவறாதீர்கள்!

காலம்- 28. 06 98 ஞாயிறு (3. 00 மணி புதியநேரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

பங்குத்தந்தை<br>இளைஞர் குருமம்

அன்பளிப்பு 20/– மட்டும். (57150)

### தெளிவாக ரி. வி. பார்க்க

இலங்கை—இந்திய ரி. வி. நிகழ்ச்சிகளைத்தெளிவாகப் பார்க்கவும் அன்ரனா பொருத்தவும், பழைய அன்ரனாக்களை, திருத்திப்பொருத்தவும் ரி.வி.,டெக், றேடியோ, மணிக்கூடுகளைப் பழுது பார்க்கவும், கொம்பியூட்டர் மூலம் ஒரே நாளில் கலர் படங்களை கழுவிப் பெற்றிடவும் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்புகளுக்கும்

(உதிரிப்பாகங்களிற்காக பழுதடைந்த, நல்லநிலையில் உள்ள ரி, வி., டெக், கசற் றேடியோ, மணிக்கூடு என்பன வாங்கப்படும்.)

**வீனஸ் டெல்கா**

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.<br>(நாகவிகாரை முன்பாக),

கிளை: பஸ் நிலையம் சாவகச்சேரி.<br>(மீன் சந்தை அருகில்)

(3995)

## ஆழ்ந்து அகன்ற....

(மூன்றாம் பக்கத் தொடர்)

வாழ்நாளில் உலகதத்துவ மேதாவி ஒருவர் இருந்தார் என்பதால் நாம் பெருமிதம் கொள்கிறோம். பண்டிதமணி அவர்கள் நீண்ட காலம் எங்களுடன் இருந்து எங்களுக்கு வழிகாட்டியாக விளங்கியமை எமது பிரார்த்தனையின் பெறுபேறேயாம்'' — என்பதாகும்.

பௌதிகப் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் பண்டிதர் ஐயாவின் முழுமையைக் காத்திரமான இக் கூற்றின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

### புலவர்கள் பாராட்டு

ஆடிப்பிறப்பொடு சுத்கரித் தோட்டமும் ஆக்கியளித்த புலவர்பிரானார் தங்கத் தாத்தா நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர் அவர்கள் பண்டிதர் ஐயா அவர்களை நோக்கி ''கற்றார் விழையும் கற்பக தருவே'' என்று கூவியழைத்தார்.

கலைமகள் ஆசிரியர் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் —

''இலங்கை யிற்பண்<br>டிதமணியென்<br>றெவரும் போற்றத்<br>தமிழ்க்கடலின்<br>நலங்கண் டினிது<br>கடந்துபல<br>நயமார் நூல்கள்<br>வழங்கியவன்...

என்று பாடி மகிழுகின்றார். இவ்வாறு கல்விமான்களினாலும் புலவர் பெருமக்களினாலும் பல சந்தர்ப்பங்களிலும் பாராட்டப்பட்டவரான பண்டிதர் ஐயா அவர்கள் மனநிறைவுடன் வாழ்ந்தார். உயிருடன் இருக்கும் பொழுதே அவருக்குக் கிடைத்த சௌரவங்களோ மிக அதிகமானவை அவர் இயற்கை யெய்திப் பன்னிரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்த பொழுதிலும் இன்றும் அவரை உலகம் பாராட்டிக் கொண்டே இருக்கின்றது.

27 - 06 - 1998 இல் பண்டிதர் ஐயா அவர்களின் நூறாவது வயது ஆரம்பித்துள்ளது. அவர்களது நூற்றாண்டு நிறைவு விழாவின் போது நினைவுமுத்திரை வெளியிடவும் பண்டிதர் ஐயா அவர்களது எழுத்துக்களை நூல் வடிவில் பிரசுரிக்கவும் நூற்றாண்டு நிறைவு மலரை நாட்டு மக்களுக்கு அளிக்கவும், பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை வேண்டிய ஒழுங்குகளைச் செய்து வருகிறது.

பண்டிதர் ஐயா அவர்கள் கல்விகற்ற வண்ணை நாவலர் பாடசாலையில் இன்று கொண்டாடப்பெறும் தொண்ணூற்றொன்பதாவது பிறந்ததின விழா அன்னவரின் நூற்றாண்டு நிறைவு விழாவுக்கு கால்கோள் விழாவாக அமையும் என்று நம்பனாம். ★

## மனித வாழ்வின்..

(நான்காம் பக்கத் தொடர்)

மாசுறுதல் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாம் சூழல் பாதுகாப்பில் பங்களிப்பு செய்யாவிடின் அது எதிர்காலச் சந்ததியினருக்குச் செய்யும் துரோகம் ஆகும். மாலை தீவுகளில் சில நீரில் மூழ்கும் அபாயம் இருந்த போதும் அங்குள்ள மக்கள் சூழல் பாதுகாப்பில் அக்கறையுடனும், கவனத்துடனும் செயற்படுகிறார்கள். நாம் எமது எதிர்காலச் சந்ததியினருக்காக சேமித்துவைத்திருக்கும் சொத்துக்களோ அல்லது பணமோ சூழலைப் பாதுகாக்க மாட்டாது. எமது பங்களிப்பின் மூலமே சூழலை பாதுகாக்கவும், மாசு அடையாமல் தடுக்கவும் முடியும். எனவேஎதிர்கால சந்ததியினருக்காக எங்களின் தேசத்தைமாசற்ற வளமுள்ள தேசமாக வைத்திருப்பது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

குடாநாட்டு சுற்றாடல் மாசுறுதலைத் தடுத்து பாதுகாக்க முழுமையாக அரசாங்கத்தையோ அல்லது வெளிநாட்டு உதவியையோ அல்லது மற்றவர்கள் செய்யட்டும் என்றோதான் இருப்பின் எதுவுமே நடைபெறாது. எனவே எமது பிரச்சினைகளைப் போக்க நாமே உழைக்க வேண்டும். இங்கொருமரம் நடுதல், அங்கொரு குளத்தை ஆழமாக்குதலினால் சுற்றாடல் பிரச்சனைகள் முடிவடையப் போவதில்லை. பொருளாதார அபிவிருத்தி நாகரிகம் என்பவற்றின் அடிப்படையில் மாற்றங்களைக் கொண்டு வரும் மனித நடவடிக்கையுடன் அவனது வாழ்க்கை தொடர்புடையது. மனித வாழ்வின் ஆதாரத்தையே உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தும் சுற்றாடல் பிரச்சினையை ஆக்க பூர்வமான முறையில் அணுகுவது அவசியம். (முற்றும்)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06 — 03 — 1933

உதிர்வு 02 — 07 — 1995

அமரர்

**ஆ.கதிரவேல்** (குணசிங்கம்)

(முன்னாள் லிகிதர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

திதி:- 28 — 06 — 98

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசி நல்வழி காட்டி எங்களை வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;<br>அன்புமனைவி, மக்கள், மருமக்கள்,<br>பேரப்பிள்ளைகள்.

தகவல்:-<br>செ. இராஜேஸ்வரன் (இராசன்),<br>வீமன்காமம்,<br>தெல்லிப்பழை;

(55445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தச் செய்திகள் மீதான தணிக்கையை நீக்குக!

## ரோய்ட்டர் பிரதம ஆசிரியர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 28

இனநெருக்கடி தொடர்பான விடயங்களில் நடுநிலைமை கடைப்பிடிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக யுத்தச் செய்திகள் மீதான தணிக்கையை இலங்கை அரசாங்கம் நீக்க வேண்டும்.

இவ்வாறு சர்வதேச செய்தித் தகவல் அமைப்பான ரோய்ட்டர் நிறுவன பிரதம ஆசிரியர் மார்க்வூட் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

''தணிக்கை தொடர்பான ஒழுங்கு விதிகளை வாபஸ் பெற்று சுதந்திரமாக செய்திகளை உடனடியாக வெளியிடுவதற்கு அனுமதிக்க வேண்டுமென ஜனாதிபதியாகிய உங்களிடம் விண்ணப்பிப்பதற்கு எனக்குக் கடப்பாடு உண்டு என நினைக்கிறேன்

''உலகளாவிய ரீதியில் பல ஆயிரக்கணக்கான வெகுஜனத் தொடர்பு சாதனங்களும் —

சர்வதேச தொடர்புச் சாதனங்களும் —

சர்வதேச முதலீட்டாளர் சமூகம் உள் அடங்கலாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் — இலங்கைச் சம்பவங்கள் தொடர்பாக விரிவான வகையிலும், நடுநிலைமையான விதத்திலும் செய்திகளைப் பெற்றுக் கொள்வதில் ரோய்ட்டர் செய்திச் சேவையிலேயே தங்கியுள்ளனர்.''

''ஆனால் செய்தித் தணிக்கையானது செய்திகள் தொடர்பாக மதிப்புக்கு மிகவும் பாதகமாகவே அமைந்துள்ளது. அத்துடன் இலங்கையின் நலன்களுக்கும் இது பாதிப்பையே ஏற்படுத்துகின்றது.''

இவ்வாறு மார்க்வூட் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-21-7)

## பொருளியற் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 28

ஜீ. சீ. ஈ. உயர்தர மாணவர்களுக்கான பொருளியற் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபர் வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பொருள்கள் சேவைகள் வரி, சென்மதி நிலுவைப் புதிய அறிமுகம், சுதந்திரத்தின் பின்னரான பொருளாதார முன்னேற்றம், பொருளாகார உறுதிக் கொள்கை ஆகிய விடயங்கள் பற்றி வே. கருணாகரன் கருத்துரை வழங்குவார். (ஐ-8)

## "யுக்திய" வெளியிட்ட போர்க்கள பொது அறிவு

யுத்தம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் வெளியிடும் தகவல்களை விட வேறு தகவல்களை வெளியிடத் தணிக்கை அமுலில் இருக்கும் நாட்டில் ஒருவாரத்தில் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தித் தலைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

★ திங்கள்:- இராணுவம் எதிரியின் காப்பரணைக் கைப்பற்றியது.

★ செவ்வாய்:- இராணுவம் எதிரிகளின் காப்பரணைக் கைப்பற்றிவிட்டது.

★ புதன்:- முன்னேறிச்செல்லும் இராணுவம் எதிரியின் காப்பரணைக் கைப்பற்றியது.

★ வியாழன்:- இராணுவத்தினரின் தாக்குதலால் பயங்கரவாதிகளின் காப்பரண் அழிந்தது.

★ வெள்ளி:- போர் வீரர்களின் தாக்குதல்கள் காரணமாக எதிரிகளின் காப்பரண் சுக்குநூறு.

★ சனி:- பயங்கரவாதிகளின் காப்பரண் இராணுவத்தினரின் கையில்.

★ ஞாயிறு:- இராணுவத்தினரின் தாக்குதல்கள் காரணமாக பயங்கரவாதிகள் காப்பரணைக் கைவிட்டுத் தப்பி ஓட்டம்.

● கேள்வி:- காப்பரண்கள் எத்தனை? (ஐ-10)

## உள்ளகப் பயிற்சிக்கு மேலும் 19 டாக்டர்கள்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இருந்து சித்தியடைந்து டாக்டர் பட்டம் பெற்றவர்களில் 19 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுயவிருப்பத்தின் பேரிலேயே உள்ளகப் பயிற்சிக்கு இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் 26 டாக்டர்களே உள்ளகப் பயிற்சிக்குத் தெரிவாகி வந்தனர்.

ஆனால் இம்முறை ஏற்கனவே இருந்துவரும் 38 உள்ளகப் பயிற்சி டாக்டர்களுடன் புதியவர்களும் சேர்த்து மொத்தம் 57 டாக்டர்கள் உள்ளகப் பயிற்சியைப் பெறவுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் சரித்திரத்திலேயே, இவ்வளவு தொகையான டாக்டர்கள் உள்ளகப் பயிற்சியைப் பெறுவது இதுவே முதல்தடவை ஆகும். (இ-15)

## குருபூசை நிகழ்வுகள்

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை தினத்தை முன்னிட்டு வழக்கம்பரை அம்பாள் ஆலயம் சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடாலயம் ஆகியவற்றில் விசேட பூசை வழிபாடும், திருவாசக பாராயணமும் நடைபெறவுள்ளது.

★ ★ ★

மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை தினத்தை முன்னிட்டு சகல சமய நிறுவனங்களிலும் காலை 6 மணி முதல் 9 மணிவரை ஒரே நேரத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்த்துமாறு வழக்கப்பரை அம்மன் ஆலய பஜனைச் சபையார் வேண்டியுள்ளனர்.

(ஐ-8-28)

★ ★ ★

மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை தினத்தை முன்னிட்டு கந்தரோடை வற்றாக்கைப்பதி அருள்மிகு ஸ்ரீவிசாலாட்சி அம்பிகாதேவி சமேத விஸ்வநாதஸ்சுவாமி தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடும், அன்னதானம் வழங்கலும் இடம் பெறவுள்ளன. (ஐ-8-30)

★ ★ ★

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை தினத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோயில் பனிப்புலம் அம்மன் கோயில் ஆகியவற்றில் விசேட பூசைகளும், திருவாசக முற்றோதலும் இடம்பெறவுள்ளன.

(ஐ-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 28

மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை தினத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் கோயில் முன்னுள்ள அன்னதான சபை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடாதிபதி சபா. ஜெயராசாவின் சமயச் சொற்பொழிவும், அறநெறிப்பாடசாலை மாணவன் இ. சர்வேஸ்வரனின் பேச்சும் இடம் பெறவுள்ளன.

(ஐ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஜூன் 28

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் மாணிக்கவாசகர் குருபூசை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் குருபூசை நிகழ்வில் பண்ணிசைப்புலவர் வே. சிவஞானம் அவர்களின் திருமுறை பஜனையும் இடம் பெறும்.

(ஐ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஜூன் 28

சரசாலை இந்து மன்றத்தினர் சரசாலை நுணுவில் சிதம்பரவிநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிறு மாலை 4,30 மணிக்கு மாணிக்கவாசகர் குருபூசையினை நடத்தவுள்ளனர். திருமதி [illegible] யில் கூட்டு வழிபாடு இடம் பெறும். (ஐ-8)

## இன்று

சோதிட ஆய்வு ஒன்றியம் நடத்தும் ''சோதிடத்தில் ஏழாம் பாவமும் இல்லறவாழ்வும்'' என்ற தலைப்பிலான ஆய்வரங்கு இன்று பிற்பகல் 2,30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

எ. சண்முகலிங்கம், எஸ். பத்மநாதன் ஆகியோர்கருத்துரை வழங்குவர். ஐயாசச்சிதானந்தம் ஆய்வரங்கிற்கு தலைமை வகிப்பார். (இ-7)

## கல்லூரி தினம்

இணுவில் மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், கல்லூரித் தினமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குக் கல்லூரித் திறந்த வெளியரங்கில் அதிபர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினராக உடுவில் கல்விக்கோட்டக் கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் கலந்துகொள்வார்.

கல்லூரி நினைவுப் பேருரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நடனவியற்றுறைத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா நிகழ்த்த உள்ளார். (ஐ-152

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மனோன்மணி இராசலிங்கம்

''வசந்தம்'' மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட கனகலிங்கம் சுருட்டு உரிமையாளர் காலஞ்சென்ற இராசலிங்கத்தின் மனைவி மனோன்மணி 27-06-98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. குணராசா
(மகன்)

64, மெசஞ்சர் வீதி,
கொழும்பு-12
T.P. 434703

(57195)

### கணேசபிள்ளை சச்சிதானந்தம்

24/2, மதவடிலேன், சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த கணேசபிள்ளை சச்சிதானந்தம் 26-06-98இல் காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி கீதா கனகநாயகம் (சுவிஸ்), உருத்திரகுமார் (ஜேர்மனி), லோகேந்திரகுமார் (சுவிஸ்), சுகுமார் (ஜேர்மனி), பவானி நாகேந்திரலிங்கம், தவேந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகநாயகம், கிரிஜா, கௌரி, நாகேந்திரலிங்கம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
நாகேந்திரலிங்கம்
(மருமகன்)

சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(57100)


## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

## தமிழ் விழா - 1998

மூன்றாம் நாள் (இறுதி நாள்)

**இன்று (28-06-98) ஞாயிறு**

0 இன்றைய நிகழ்ச்சிகள் 0

காலை நிகழ்ச்சிகள்:

இடம்: நாவலர் கலாசார மண்டபம்
நேரம்: காலை 9-00 - 1-00 மணி வரை.

கருத்தரங்கு

0 ஈழத்து இலக்கியங்களில் ஒரு மீள் பார்வை 0

தலைமை:
கலாநிதி க. குணராஜா
(செங்கை ஆழியான்)

கருத்துரையாளர்கள்:

☐ செல்வி மாதவி சுந்தரம்பிள்ளை
(ஈழத்துக் கவிதைகள் ஒரு சமூகவியல் நோக்கு)

☐ கலாநிதி நா. சுப்பிரமணியன்
(தமிழ் இலக்கியத்தின் பின் நவீனத்துவம்)

☐ திரு. ஆர். திலகரட்ணம்
(இலக்கியமும் விலகல் நடத்தையும்)

மாலை நிகழ்ச்சிகள்:

இடம்: மன்ற அரங்கு
நேரம்: மாலை 5-30 மணி

தலைமையுரை:
திரு. க. ராஜகோபால்
(செம்பியன் செல்வன்)

சிறப்புரை:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
''தமிழ்மொழி 21 ஆம் நூற்றாண்டை நோக்கி''

கலை நிகழ்ச்சிகள்:

☐ இசைக்கச்சேரி: சங்கீத கலா வித்தகர்
திருமதி சரோஜாயஸ்ரின் (பாட்டு)
சங்கீத கலா வித்தகர்
திரு. பத்மநாதன் (வயலின்)
சங்கீத கலைமாணி
திரு. எஸ். துரைராஜா (மிருதங்கம்)

☐ இசை நாடகம்:
சகுந்தலை
(திருமறைக் கலாமன்றம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— திருமறைக் கலா மன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4134)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்)

தில் ஏனைய பகுதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு பெரும் எண்ணிக்கையான பொலீஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவது கஷ்டமானதாக இருக்கும் என பொலீஸ்மா அதிபர் தேர்தல் ஆணையாளருக்கு கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

தற்பொழுது ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணக்கம் ஏற்படத் தவறி எப்படியும் ஆகஸ்ட் மாதம் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டிருப்பதால் கூடுதல் பொலீஸாரை பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இப்பிரச்சினை குறித்தே விரிவாக ஆராயப்பட்டது.

ஐந்து மாகாண சபைகளுக்குமான தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த 30 ஆயிரம் பொலீஸார் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

(சி-7-9-21)


## வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் சேவை

ஜிலானி முகவர் தபால் நிலையம் T. N. T COURIER நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் T. N. T. துரித தபால் சேவையை யாழ்ப்பாணத்திலும் ஆரம்பித்துள்ளது என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இதன் மூலம்-

உள்நாட்டு, வெளிநாட்டு,
தபால்கள்/ ஆவணங்கள்
என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.

தபால்கள் பெற்றுக்கொள்ளும் இடங்கள்:

ஜிலானி முகவர் தபால் நிலையம்
இல. 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

குமரன் விடுதி
ஜிலானி முகவர் தபால் நிலையம்
இல. 67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4135)


## சிமெந்து விநியோகம்

தென்மராட்சி, ஜூன் 28

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சிமெந்து கோரி விண்ணப்பித்தோரில் 60 பேருக்கு தலா ஐந்து பைக்கற் வீதம் சிமெந்து வழங்கப்பட்டுள்ளது.

சிமெந்துக்கு விண்ணப்பித்தோரில் கிணறு அமைக்கவுள்ள 60 பேருக்கு அவற்றை முன்னுரிமை அடிப்படையில் வழங்குமாறு பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி விடுத்த வேண்டுகோளை அடுத்து சிமெந்து வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## ஜெயலலிதா...

(முதலாம் பக்கத் தொடர்)

தன்னால் கலந்து கொள்ள முடியவில்லை என திருணாமூல் காங்கிரஸ் தலைவர் மமதாபனர்ஜியும் — நேற்று முன்தினம் அறிவித்திருந்தனர்.

இதேவேளை லோக்சக்தி தலைவர் ராமகிருஷ்ண ஹெக்டேயின் சார்பில் அவரது கட்சிப்பிரதிநிதி ஜீவராஜ் ஆலுவா இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்,

இதற்கிடையில் மத்தியில் ஆட்சி புரியும் பாரதீய ஜனதாக் கட்சி அரசு தனது சொந்த முரண்பாடுகள் காரணமாக கவிழுமானால் மாற்று அரசு அமைக்கும் அரசியல் சட்டபூர்வமான பொறுப்பை காங்கிரஸ் தட்டிக் கழிக்காதென அக்கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தி நேற்று அறிவித்தார்.

(இ-7)

## சுதேசவைத்தியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஜூன் 28

சுதேச வைத்தியர்கள் சுதேசவைத்திய சங்கங்கள் ஆயுர்வேத பாதுகாப்பு சேவை பதிவுக்காகக் காத்திருக்கும் வைத்தியர்கள் ஆகியோருடனான கலந்துரையாடலொன்றை மாகாண சுதேசமருத்துவப் பணிப்பாளர் டாக்டர் கே. பாலசுப்பிரமணியம் இன்று நடத்தவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் இன்று பகல் ஒரு மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள லங்கா ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியில் நடைபெறவுள்ளது,

இதே வேளை யாழ். மாவட்ட சித்த மருத்துவம் சம்பந்தமான கலந்துரையாடலொன்று எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் அரச செயலகத்தில் நடைபெறும்.

## மின்மாற்றி தகர்ப்பு

கொழும்பு, ஜூன் 28

இரத்தினபுரி மாவட்டம் பலாவத்தையில் நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் மின்மாற்றி ஒன்று தகர்க்கப்பட்டது.

மின்மாற்றி தீப்பிடித்து முற்றாக எரிந்து விட்டது.

இதுவரை இரத்தினபுரியில் 3 மின் மாற்றிகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

(இ-21)

## தாக்குதல்களை...

(முதலாம் பக்கத் தொடர்)

குழுவின் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து புறப்பட்ட ஊர்வலம் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தைச் சென்றடைந்தது. அங்கு ஐ. நா. தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரியிடம் ஐ. நா. செயலாளருக்கான மகஜர் கையளிக்கப்பட்டது,

பொது மக்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடராமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மகஜரில்குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-7)


## அஸ்ரன் வெளியீடு

11 வருட G.C.E O/L, A/L
1988 - 1997 வரை

சகல பாடங்களும் பெற்றுக் கொள்ளலாம்;
சனி, ஞாயிறுகளில் தொடர்பு கொள்ளவும்.

75, சிவன்பண்ணைவீதி,
கொட்டடி
யாழ்ப்பாணம்.

(57164)

# GNANAMS LINK INTERNATIONAL

## ஞானம்ஸ் றேட்ஸ்

150, 152, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## ஞானம்ஸ் றேட்ஸ்

கிளை நிறுவனம்
251, கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்,

அன்பான வாடிக்கையாளர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

வாடிக்கையாளர்களின் நலன் கருதி இன்றிலிருந்து வெளிநாட்டிற்கான அழைப்பு கட்டணத்தையும், அங்கிருந்து வரும் பதில் கட்டணத்தையும் வெகுவாகக் குறைத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

சகல நாள்களிலும் வெளிநாட்டிற்கான அழைப்புக் கட்டணம் 100 ரூபா
வெளிநாட்டிலிருந்து வரும் பதில் கட்டணம் நிமிடத்திற்கு 5 ரூபா

## ஞானம்ஸ் லிங் இன்ரநாஷனல்

### ஞானம்ஸ் றேட்ஸ்

150, 152, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

✠ தொலை பேசி இல.;- 021-2052
021-2053

### ஞானம்ஸ் றேட்ஸ்

(கிளை நிறுவனம்)
251, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

✠ தொலை பேசி இல.:- 021-2666
பக்ஸ் 021-2666

(021-2101 அவசர அழைப்புக்கான இலக்கம்)

## இரவு பகல் தொலைபேசிச் சேவை




உங்கள் உள்ளூர் வெளியூரிலுள்ள உறவினர், நண்பர்களுடன் தாராளமாக உரையாடுவதற்கு எமது ஸ்தாபனத்தில் சகல வசதிகளையும் செய்து தருகின்றோம் என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இவற்றுடன்

I) தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துடன் இணைந்த (FAX) பக்ஸ் வசதிகள்.
II) பல்வேறு இடங்களுக்குமான தொலைபேசி வசதிகள்.
III) போட்டோ பிரதி சேவை இன்னும் பலவற்றை இத்துடன் இணைத்துள்ளோம்.
IV) இவற்றுடன் இரவு தங்கி நின்று உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும் வசதி.

- நிர்வாகி

(C/4125)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [illegible] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-6-1998 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.